விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 298 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 26 வெள்ளிக்கிழமை (13.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## முல்லை நீதிபதி சரவணராஜாவுக்கு எவ்வித உயிர் அச்சுறுத்தலும் இல்லை

### வெளிநாடு சென்றமை முன்கூட்டியே திட்டமிட்டது
### அறிக்கை சமர்ப்பித்தது குற்றப் புலனாய்வுப் பிரிவு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி சரவண ராஜாவுக்கு உயிருக்கு எவ்வித அச்சுறுத்தல் இல்லை என்றும் அவர் திடீரென வெளிநாடு சென்றமை முன் கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்று என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 25ஆம் திகதி இந்தியா செல்வ தற்கு நீதிபதி விடுப்பு 02

## வடக்கை முன்னேற்ற பிரித்தானியா ஆதரவு



### வட மாகாண ஆளுநரிடம் பிரிட்டன் அமைச்சர் உறுதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் வாழ்வை கட்டியெழுப்புவதற்கும் பூரண ஆதரவை பிரித்தானியா வழங்கும் என பிரிட்டன் அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியன் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் பெண்ணின் சடலம் நேற்று மீட்பு

### அடையாளம் காணுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள இலங்கை வங்கிக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கையில் பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 5 அடி உயரம் கொண்ட பொது நிறமான நரைத்த தலைமுடியுடன் காணப் 15

## ஆறு நாள் காய்ச்சல் குடும்பப் பெண் மரணம்



(யாழ்ப்பாணம்)

ஆறு நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் யாழில் உயிரிழந்துள்ளார்.

வாடி ஒழுங்கை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவரூபன் 15

## வவுனியாவில் புலிகளின் ஆயுதம், தங்கம் தேடி

### பொலிஸாரால் அகழ்வுப் பணி



15

## தமிழர்கள் உரிமையை பெற அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

### பிரிட்டன் அமைச்சரிடம் தமிழ்த் தலைவர்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் உரிமையை பெறவும் கௌரவமாக வாழவும் பிரித்தானியா இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என பிரிட்டன் அமைச்சரிடம் தமிழ்த் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரித்தானிய அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியனுக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. 15

## நவராத்திரி காலத்தில் பரீட்சை நடத்துவது வேதனைக்குரியது!



### கலாநிதி ஆறு.திருமுருகன் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

நவராத்திரி விரத காலத்தில் தவணைப் பரீட்சையை நடத்துவதற்கு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தீர்மானித்தமை மிகுந்த வேதனை அளிப்பதாக சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவருமான கலாநிதி ஆறு. 15

## இந்திய மீனவர்களுக்கு அனுமதி இல்லை

### எனது முடிவே அரசின் முடிவு
### மன்னாரில் அமைச்சர் டக்ளஸ்

(மன்னார்)

இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் மீன் பிடிப்பதற்கு ஒரு நொடி கூட அனுமதி அளிக்க எனக்கு இணக்கப்பாடு இல்லை எனவும் கடற்றொழில் அமைச்சராக இந்த விடயத்தில் நான் எடுக்கும் 02

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமுத்திரத்தின் ஒற்றுமையை எவராலும் சிதைக்க முடியாது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

இந்து சமுத்திரமானது வளர்ந்துவரும் உலக பொருளாதாரத்திற்குள் முக்கியமான பங்கு வகிப்பதாகவும், உலக அரசியலுக்குள் எடுக்கப்படும் தீர்மானங்களே அதன் எதிர்காலத்தை தீர்மானிக்கும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கலசாரம், வர்த்தகம் மற்றும் ஒன்றோடு ஒன்று பிணைந்து காணப்படும் நாகரிக பாரம்பரியத்தை கொண்ட இந்து சமுத்திரத்தின் ஒற்றுமையை எவராலும் சிதைக்கவோ துடைத்தெறியவோ முடியாதெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

"இந்து சமுத்திரத்தில் உருவாகும் புதிய ஒழுங்கு முறை" என்ற தொனிப் பொருளின் கீழ் 11 சர்வதேச அமைப்புகள், 44 நாடுகளின் சமுத்திரவியல் பிரதிநிதிகள் மற்றும் கடற்படை பிரதானிகளின் பங்கேற்புடன் இந்த மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க,

இந்து சமுத்திரம் என்பது ஒரு எழுச்சி அல்ல என்றும் அது நாகரிகம் என தெரிவித்தார்.

இந்து சமுத்திரம் என்பது ஆசிய - பசுபிக், இந்து - பசுபிக், மற்றும் ஒரே தடம் - ஒரே பாதை என்று எவருக்கும் சொந்தமில்லாத அரசியல் அமைப்பாகும் என்றும் கூறினார்.

இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு இணையாக வளைகுடா சமவாயத்தின் நாடுகள் குறித்தும் சிந்திப்பதாக கூறினார்.

அதனால் இந்து சமுத்திரத்திற்குள் பாரிய இரு பொருளாதார மத்தியஸ்தானங்கள் உருவாகி வருவதாக கூறிய அவர், 2050 களில் ஆபிரிக்கா துரித வளர்ச்சியை அடையுமென எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.

இதனால் மேற்கு, ஆசிய மற்றும் இந்திய பொருளாதார கேந்திர நிலையங்கள் என மூன்று பிரிவுகள் உருவாகலாம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தில் இலங்கை மூலோபாய அமைவிடத்தை கொண்டுள்ளமையினால் கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தி செய்து மிகப்பெரிய விநியோக மத்தியஸ்தானமாக மாற்ற முடியும் என கூறினார்.

அதனால் கிழக்கு இந்திய சமுத்திர அபிவிருத்தியின் பிரதிபலன்களை நாமும் அடைந்துகொள்ள முடியும் எனவும் அம்பாந்தோட்டை துறைமுகத்தை ஆபிரிக்காவுடன் தொடர்புபடுத்தி வர்த்தக துறைமுகமாக மாற்ற முடியும் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இன்று உலகின் பிரதான துறைமுகங்கள் வரிசையில் டுபாய் துறைமுகம் இணைந்துள்ளதாகவும் அதேபோல் மேலும் பல துறைமுகங்களும் இணைந்துள்ளமையினால் இலங்கையும் இந்த போட்டிக்குள் இருக்க வேண்டுமானால் மற்றுமொரு துறைமுகத்தை உருவாக்க வேண்டும் என கூறினார்.

மேலும் இந்து சமுத்திரத்தில் கடல்சார் சுதந்திரம் மற்றும் கடலுக்கடியில் அமைக்கப்படும் கம்பிவடங்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தினார். (ம-7)




## முல்லை...

கோரி விண்ணப்பித்தபோது, அதற்கு அனுமதி வழங்கப்பட்டு செப்ரெம்பர் 24 ஆம் திகதி அவர் திடீரென வேறு நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார் என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அரசாங்கத்திடம் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரவணராஜாவுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்திருந்த நிலையில் அவை குறித்து விசாரணை நடத்திய குற்றப்புலனாய்வு பிரிவு இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

குற்றப்புலனாய்வு பிரிவு சமர்ப்பித்த அறிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி சரவணராஜா 2021 ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி நீதவானாக நியமிக்கப்பட்ட அதேநேரம் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் அவருக்குத் தேவையான சகல பாதுகாப்பையும் வழங்கியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் முகவர் ஒருவர் ஊடாக விமானப் பயணச்சீட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டது என்றும் அது தொடர்பான நடவடிக்கைகள் அமெரிக்காவில் உள்ள தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட போதும் அந்த தொலைபேசி எண் செயல்படவில்லை என கூறப்பட்டுள்ளது.

கல்முனைப் பகுதியில் இருந்து விமானப் பயணச்சீட்டுக்கான பணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் ஷார்ஜா, நைரோபி, டெல்லி வழியாக ஒக்டோபர் 12ம் திகதி இலங்கை திரும்புவதற்கு டிக்கெட் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஷார்ஜாவை அடுத்து நைரோபிக்கு செல்ல நீதவான் விமான டிக்கெட்டை பயன்படுத்தவில்லை என்பது விமான நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட தகவலின்படி, உறுதி செய்யப்பட்டுள்ளது.

நீதிபதியின் வெளிநாட்டுப் பயணம் முன்கூட்டியே திட்டமிடப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. அவரது ஆவணத்தில் நைரோபியே அவரது இலக்காக பட்டியலிடப்பட்டுள்ளது. மேலும் சேவையிலிருந்து ராஜினாமா செய்த பின்னர் உத்தியோக பூர்வ கடவுச்சீட்டைப் பயன்படுத்துவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக ஆயுதம் ஏந்திய இரண்டு அதிகாரிகளும், உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்புக்காக 12 மணித்தியாலங்கள் உட்பட தினமும் நான்கு உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்பட்டதாக முல்லைத்தீவு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

மேலும் நீதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியான பொலிஸ் கான்ஸ்டபிள் பிரேமன், பாதுகாப்பு போதுமானதாக இல்லை என நீதிபதி ஒருபோதும் கூறவில்லை என்றும், உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக நீதிபதி தம்மிடம் கூறவில்லை என்றும் கூறியுள்ளார்.

நீதிபதி வெளிநாடு செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தனது காரை விற்றுவிட்டு செப்ரெம்பர் 23ஆம் திகதி வெளிநாடு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. முல்லைத்தீவு நீதிமன்றில் கடமையாற்றி வரும், தனக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதாக நீதிபதி ஒருபோதும் தெரிவிக்கவில்லை என நீதிமன்றப் பதிவாளர் கூறியுள்ளார்.

இதேவேளை தனது கணவர் நீதிபதி என்ற முறையில் கடுமையான மன அழுத்தத்தில் இருந்ததாகவும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாதுகாப்பு இல்லாதது குறித்து குறிப்பிட்ட அவர் சமீப காலமாக அவ்வாறான பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் தன்னிடம் கூறவில்லை எனவும் மனைவி குறிப்பிட்டுள்ளார்.

செப்ரெம்பர் 23 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் தனது கணவர் வெளியேறியதாகவும், அவர் வெளிநாடு செல்வது தனக்குத் தெரியாது என்றும் நீதிபதியின் மனைவி கூறியுள்ளார். என குற்றப்புலனாய்வு சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இந்திய மீனவர்...

தீர்மானம் தான் அரசாங்கத்தின் தீர்மானம் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிந்து தீர்வுகள் வழங்குவதற்கு வந்ததாக தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பள்ளிமுனை மீனவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஊடகவியலாளர்கள் வினவிய நிலையில் அவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த கலந்துரையாடலில் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி தீர்வை பெற்று கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

அதே நேரம் இந்திய மீனவர்கள் வருகை தொடர்பிலும் மன்னார் மாவட்டத்தில் இடம் பெற்ற ஊடகவியளாலர் சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்கு தெரிவுக்கும் கருத்துக்களை அமைச்சரவை கூட்டங்களில் தெரிவிப்பாரா? என மீனவர்களால் முன்வைக்கப்பட்ட கேள்வி தொடர்பிலும் ஊடகவியலாளர்களால் வினவப்பட்ட நிலையில்

பாராளுமன்றத்திலும், அமைச்சரவையிலும், தான் எப்போதும் ஒரே விடயத்தை பேசுவதாகவும் உள் ஒன்று வெளி ஒன்று வைத்து ஒரு போதும் பேசுவது இல்லை எனவும் இந்திய மீனவர்கள் ஒரு வினாடி கூட இலங்கை எல்லைக்குள் மீன் பிடிப்பது தொடர்பில் எனக்கு இணக்கபாடு இல்லை எனவும் கடற்றொழில் அமைச்சரின் முடிவுதான் அரசாங்கத்தின் முடிவாக இருக்க முடியும் என தெரிவித்தார்.

மேலும்,வடமாகாணத்தில் உள்ள ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்திய மக்களிடமும் இந்திய அரசியல் பிரதிநிதிகளிடமும் இந்திய மீனவர்களின் வருகை கடற்படையின் பிரச்சினை இல்லை என்பதையும் அது வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினை என்பதையும் அவர்களின் வருகையால் எமது வளங்கள் அழிக்கப்படுவதையும் எமது கடற்றொழில் உபகரணங்கள் சேதப்படுத்தப்படுவதையும் வாழ்வாதாரம் சீரழிக்கப்படுவது தொடர்பிலும் பேச வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7,285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை பிற்போடும் அதிகாரம் அரசாங்கத்துக்கு கிடையாது

## பப்ரல் குற்றச்சாட்டு

**(கொழும்பு)**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் அதிகாரம் அரசாங்கத்துக்கு கிடையாது என பப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதாக தேர்தல் ஆணைக்குழு இது வரை அறிவிக்கவில்லை.

அரசாங்கமும் தேர்தலை பிற்போடவில்லை. தேர்தலை பிற்போடும் அதிகாரம் அரசாங்கத்துக்கு இல்லை.

அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக தாக்கல் செய்திருக்கும் வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கு ஜன நாயகத்துக்கு விரோதமான முறையில் முயற்சித்து வருகிறது. எனினும் பாராளுமன்றின் அனுமதி இல்லாமல் வேட்பு மனுக்களை நிராகரிக்க முடியாது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு உறுதியான நிலைப்பாட்டிலேயே இருக்கிறது.

வேட்புமனுக்கள் கோரப்பட்டு, தேர்தல் நடத்துவதற்கு இருக்கும் நிலையில், வேட்பு மனுக்களை நிராகரிப்பதற்கு மாற்றமாக தேர்தலை நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தேர்தல் ஆணைக்குழு இருக்கிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பது தொடர்பாக நீதிமன்றில் பல வழக்குகளும் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளன.



நீதிமன்றம் ஊடாகவோ அல்லது அரசாங்கத்திடமிருந்தோ நிதியை பெற்று உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு மிக விரைவில் நடவடிக்கை எடுக்கும் என நாம் நம்புகிறோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# கோட்டா நாட்டைவிட்டு வெளியேறியமை தவறு

## நாமல் தெரிவிப்பு

(கொழும்பு)



கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியமை தவறு என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எமது மக்கள் ஜனநாயகத்தை விரும்பும் மக்கள். கோட்டாபய ராஜபக்ஷ 52 சதவீத மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனாதிபதி வேறு எந்த ஜனாதிபதியும் அவ்வாறு வெற்றிபெறவில்லை.

இதன்போது நாட்டின் அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூற வேண்டி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியமையை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள் அல்லது அந்த நிலைப்பாட்டை சரியென நினைக்கிறீர்களா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த நாமல், அது தவறானது. இது என்னுடைய தனிப்பட்ட கருத்து. எமது மக்கள் ஜனநாயகத்தை விரும்பும் மக்கள், கோட்டாபய ராஜபக்ஷ 52 சதவீத மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனாதிபதி.

வேறு எந்த ஜனாதிபதியும் அவ்வாறு வெற்றி பெறவில்லை என குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# ரணிலுக்கு அழைப்பு விடுக்கும் மொட்டுக்கட்சி

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்முடன் இணக்கமாக செயற்பட்டால் முரண்பாடற்ற வகையில் அரச நிர்வாகத்தை முன்னெடுக்கலாம் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பொது ஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்,

"கோவிட் பெருந்தொற்று மற்றும் பொருளாதார பாதிப்பு காரணமாக தேசிய தொழிற்றுறை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியை மாத்திரம் பிரதான இலக்காக அரசாங்கம் கொண்டுள்ளதே தவிர தேசிய தொழிற்றுறையை மேம்படுத்த எந்த நடவடிக்கைகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை.

இதை பிரதான குறைபாடாக கருதுகிறோம். நாட்டில் கடந்த வாரம் நிலவிய மழையுடனான காலநிலையால் 15 இற்கும் அதிமான மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பெரும் போக விவசாயம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த முறை பெரும் போக விவசாயத்தை பயனுடையதாக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தை தோற்றுவித்தோம்.

பொதுஜன பெரமுனவின் கொள்கைக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்டதால் பொது ஜன பெரமுன தலைமையிலான அரசாங்கமும்,கட்சியும் பலவீனமடைந்தது. பாரிய போராட்டத்துக்கு ஆளானதோடு, கட்சி என்ற ரீதியில் மீண்டும் பலமடைந்துள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்ய பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் சிரேஷ்ட உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படும் போது அவர்கள் அதிருப்தியடைந்து எதிர்ப்பு தெரிவிப்பது இயல்பானதே. ஆகவே பொதுஜன பெரமுனவுடன் இணக்கமாக செயற்படுவதன் அவசியத்தை ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# இலங்கையில் வேகமாக பரவும் கண்நோய்

(கொழும்பு)

சளி, இருமல் போன்றவற்றை ஏற்படுத்தும் வைரஸ் கிருமியினால் சிறுவர்கள் மத்தியில் கண்நோய் வேகமாகப் பரவுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

வைரஸ் காய்ச்சலால் அவ்வப்போது வைரஸ்கள் மற்றும் கண் நோய்கள் வரலாம் எனவும்.எனவே அழுக்கு கைகளால் கண்களைத் தொடுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கண் சிவத்தல், கண்ணீர் வெளியேற்றம், கண் வலி போன்ற அறிகுறிகளும் ஏற்பட வாய்ப்புள்ளது.

மேலும், இந்த கண் நோய் வைரஸ் என்பதால், நுண்ணுயிர் எதிர்ப்பிகள் தேவையில்லை எனவும், ஐந்து நாட்களுக்கு மேல் இந்நோய் நீடித்தால், சிகிச்சை பெறுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# கடன் வழங்குநர்களுடன் இலங்கை செய்த ஒப்பந்தங்கள்

### எமக்கு எதுவும் தெரியாது–ஐ.எம்.எப்

(கொழும்பு)

கடன் வழங்குநர்களுடன் இலங்கை செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பாக தங்களுக்கு அறிவிக்கவில்லை என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக, கடன் வழங்குநர் நாடுகளுடன் இலங்கை பேச்சுவார்த்தைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது.

எனினும், இந்நாடுகளுடன் செய்துக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாக, தமக்கு அறிவிக்கப்படவில்லை என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின், இலங்கைக்கான தூதுக் குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூயர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடன் இலக்குகளுடன் நிலைத்தன்மையை மதிப்பிடுவதற்கு, ஒப்பந்தங்களின் முழுத் தொகுப்பையும் மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதிய வருடாந்த கூட்டங்களில் பங்கேற்றுள்ள நிலையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, தமது கடன்களை அகற்றுவது தொடர்பாக இலங்கையுடன் பூர்வாங்க உடன்படிக்கையை எட்டியதாக சீனா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# அமெரிக்க கடற்படைக் கப்பல் இலங்கையை வந்தடைந்தது



(கொழும்பு)

அமெரிக்க கடற்படைக் கப்பலான யு.எஸ்.என்.எஸ் பிரன்சுவிக் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

நேற்று முன்தினம் புதன் கிழமை இலங்கையின் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த குறித்த கப்பலானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இங்கிருந்து புறப்படவுள்ளது.

103 மீற்றர் நீளமுள்ள கப்பலில் 24 பேர் கொண்ட பணியாளர்கள் உள்ளனர்.

கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில், கப்பலின் பணியாளர்கள் நாட்டிலுள்ள சில சுற்றுலாத் தலங்களுக்குச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குயின்டன் டி கொக் சதம்
# அவுஸ்திரேலியாவை வீழ்த்தி
# தென்னாபிரிக்கா அபார வெற்றி





உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி தென்னாபிரிக்கா 134 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

2023ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் 10ஆவது போட்டி நேற்று இடம்பெற்றது.

நேற்றைய போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 07 விக்கெட்டுக்களை இழந்து 311 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அணிசார்பில், அதிகபடியாக குயின்டன் டி கொக் 109 ஓட்டங்களையும், எய்டன் மார்க்ரம் 56 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில், அவுஸ்திரேலிய அணியின் க்ளென் மெக்ஸ்வெல் 34 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 312 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 40.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 177 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியை தழுவியது.

அணிசார்பில், அதிகபடியாக மார்னஸ் லபுஸ்காக்னே 46 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

துடுப்பாட்டத்தில் சோபிக்க தவறிய அவுஸ்திரேலிய அணியின் ஏனைய வீரர்கள் 30க்கும் குறைந்த ஓட்டங்களையே பெற்றனர்.

பந்துவீச்சில், தென்னாபிரிக்க அணியின் காகிசோ ரபாடா 33 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்ட நாயகராக சதம் அடித்த குயின்டன் டி கொக் தெரிவானார். (ம-7)

# அணியை நல்ல நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும்
## இந்திய அணித் தலைவர் ரோஹித்



முழுந்தவரை அணியை நல்ல நிலைக்கு கொண்டு செல்வது எனது பொறுப்பு என இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தனுக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்ற பின் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எங்களுக்கு நல்ல வெற்றியாக அமைந்தது. தொடக்கத்திலேயே உத்வேகத்தை பெறுவது முக்கியம். அழுத்தத்தை உள்வாங்கி களத்தில் சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். அதை செய்தோம். வெவ்வேறு திறன்களை கொண்ட வீரர்களை பெற்று இருப்பது அணிக்கு நல்லதாக அமைந்துள்ளது. சுதந்திரமாகவும், அச்சமின்றியும் விளையாடும் பேட்ஸ்மேன்கள் உள்ளனர்.

இதுபோன்ற திறமைகள் ஒன்றாக சேர்ந்து வரும் போது உங்களுடைய அணியும் நல்ல இடத்தில் இருக்கும். கடந்த போட்டியை போல எங்களது வீரர்கள் அழுத்தத்தை உள்வாங்கி பயமற்ற கிரிக்கெட்டை விளையாடும் திறமையை கொண்டுள்ளனர்.

நான் எனது இயல்பான ஆட்டத்துக்கு திரும்பி உள்ளேன். உலகக் கோப்பை போட்டியில் சதம் அடித்த சாதனை படைத்தது சிறப்பானது. இது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் அதுபற்றி அதிகம் யோசிக்க விரும்பவில்லை.

ஏனென்றால் முன்னோக்கி செல்ல நீண்ட வழி இருக்கிறது. எனது கவனத்தை இழக்காமல் இருக்க வேண்டும் என்பதை அறிவேன். முடிந்தவரை அணியை நல்ல நிலைக்கு கொண்டு செல்வது எனது பொறுப்பு. இவ்வாறு அவர் கூறினார். (ம-7)

# உலகக்கிண்ணம் பார்க்க
## குஜராத் செல்லும் ரஜினிகாந்த்



உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி பார்க்க நடிகர் ரஜினிகாந்த், குஜராத் செல்லவுள்ளார்.

அதாவது, ஒருநாள் உலக கோப்பை தொடரின் முக்கிய போட்டியாக கருதப்படும் இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திரமோடி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த போட்டியை காண நடிகர் ரஜினிகாந்த், அமிதாப் பச்சன், சச்சின் டெண்டுல்கர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து நடிகர் ரஜினிகாந்த் இந்த போட்டியை காண குஜராத் செல்லவுள்ளார்.

முன்னாள் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், நடிகர்கள் ரஜினிகாந்த், அமிதாப் பச்சன், ஆகியோருக்கு பிசிசிஐ கோல்டன் டிக்கெட் வழங்கியது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பயிற்சியை தொடங்கினார்
## இந்திய ஆரம்ப வீரர் சுப்மன் கில்



இந்திய அணியின் தொடக்க வீரரான சுப்மன் கில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். இதனால் சென்னையில் நடைபெற்ற உலக கோப்பையில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் ஆடவில்லை. அதனை தொடர்ந்து ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியிலும் அவர் ஆடவில்லை.

சென்னை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். 80 சதவீதம் குணமடைந்து விட்டார் என பிசிசிஐ மருத்துவ குழு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி உடல் நலம் முன்னேறி வரும் நிலையில், சுப்மன் கில் அகமதாபாத்துக்கு சென்றடைந்தார்.

அங்கு அவர் தனது பயிற்சியை தொடங்கி உள்ளார். இதனால் அகமதாபாத்தில் 14ஆம் திகதி நடைபெறும் பாகிஸ்தானுக்கு எதிராக ஆட்டத்தில் அவர் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த செய்தியால் இந்திய ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அவர் இந்திய அணியில் இடம் பிடித்தால் இஷான் கிஷன் வெளியேறுவார். அவர் 2 போட்டியில் விளையாடி 47 ரன்கள் எடுத்துள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் போட்டியில் அவர் டக் அவுட் ஆனார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வருடாந்தம் 150,000 பேர் மரணிக்கின்றனர்

## மருத்துவர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் ஏறக்குறைய ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் பல்வேறு நோய்களினால் மரணமடைவதாகவும் நோயுற்றவர்களை அவர்களின் வாழ்நாளில் கவனிப்பதற்கு நோய்த்தடுப்புச் சேவைகள் தேவைப்படுவதாகவும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உலக நல்வாழ்வு மற்றும் நோய்த்தடுப்பு தினம் ஒவ்வோர் ஆண்டும் ஒக்டோபர் மாதம் இரண்டாவது சனிக்கிழமையன்று உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்படுவதுடன், அது குறித்த நிகழ்வொன்று நேற்று முன்தினம் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்றது.

தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் சமூக மருத்துவ நிபுணர் சூரஜ் பெரேரா இந்தச் செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையில் புற்றுநோய், இதயநோய் போன்ற தொற்றாத நோய்கள் அதிகரித்து வருவதாலும் முதியோர் எண்ணிக்கை அதிகரிப்பதாலும் இந்தச் சிகிச்சைச் சேவைகள் மிகவும் அவசியமாகிவிட்டதாகவும் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய சுகாதாரக் கொள்கையானது நோய்த்தடுப்பு சிகிச்சை தேவைப்படும் அனைத்து நோயாளிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, நோய்த்தடுப்பு சிகிச்சையை மேம்படுத்துவதற்கான தேசிய மூலோபாய நடவடிக்கை கட்டமைப்பு 2019-2023 கீழ் இலங்கையில் நோய்த்தடுப்பு பராமரிப்பு சேவைகளை மேலும் மேம்படுத்துவதற்கு வழிகாட்டுகிறது.

நோய்த்தடுப்பு சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்கள் பெரும்பாலும் குடும்ப மருத்துவரிடம் முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ அந்த கவனிப்பைப் பெற விரும்புகிறார்கள்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில், நோய்த்தடுப்பு சிகிச்சை ஆலோசனை சேவையால் நிர்ணயிக்கப்பட்ட சிகிச்சை இலக்குகள் மற்றும் கூட்டு சிகிச்சை குறித்து மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டியது அவசியம்.

இதற்கு அருகில் உள்ள ஆரம்ப மருத்துவ சிகிச்சை நிறுவனம் மற்றும் சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ளலாம் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். (நி-5-6)

# போலி செயலிகள் குறித்து அவதானமாக இருங்கள்

## கணனி அவசர நடவடிக்கை பிரிவு எச்சரிக்கை


(கொழும்பு)

இணையம் ஊடாக கடன் வழங்கும் போலி செயலிகள் குறித்து இலங்கை கணனி அவசர நடவடிக்கை பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், இணையம் ஊடாக உடனடியாக கடன் வழங்குநர்களுக்கு தனிப்பட்ட விபரங்களை வழங்க வேண்டாம் என தெரிவித்துள்ளது.

"இணையம் ஊடாக கடன் வழங்கும் மோசடிகள் அதிகரித்துள்ளன. மேலும் அந்த நிறுவனங்களுக்கு தங்கள் விபரங்களை வழங்க வேண்டாம் என மக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை கணனி அவசர நடவடிக்கை பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார். (நி-5-6)

# மலையகத்தில் தொடரும் சீரற்ற காலநிலை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



(ஹற்றன்)

பொகவந்தலாவ பிரதேசத்தில் பெய்து வரும் கடும் மழையினால் கெசல்கமுவ ஓயாவின் கிளை ஆறுகள் பெருக்கெடுத்து பாடசாலைகள் மற்றும் பல தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் பெய்த கடும் மழையின் காரணமாக, பொகவந்தலாவ சென்மேரிஸ் தேசிய பாடசாலைக்கு சொந்தமான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு, வகுப்பறைகளிலும் நீர் நிரம்பியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நோர்டன்பிரிட்ஜ் பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக விமலசுரேந்திர நீர்த்தேக்கம் நிரம்பி வழிவதாக நீர்த்தேக்கத்திற்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுமட்டுமன்றி கனமழை காரணமாக ஹற்றன்- நுவரெலியா, ஹற்றன்- கொழும்பு பிரதான வீதிகளில் மண்சரிவு ஏற்படவாய்ப்புகள் இருப்பதாகவும், அவ்வீதிகளில் வாகனங்களை செலுத்தும் போது கவனமாக வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் சாரதிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். (நி-5-6)

# நியூசிலாந்து பொதுத்தேர்தலில் களமிறங்கும் இலங்கைத் தமிழர்

(வெலிங்டன்)

நியூசிலாந்து தேர்தலில் தேசியக் கட்சி தேர்தல் வேட்பாளர் பட்டியலில் ஒரு இலங்கைத் தமிழர் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்தில் நாளை சனிக்கிழமை பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் முன்னாள் நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் பிரதிநிதித்துவப்படுத்திய ஆளும் தொழில் கட்சிக்கும் எதிர்க் கட்சியான தேசியக் கட்சிக்கும் இடையில் போட்டி நிலவுகிறது.

இரு கட்சிகளுக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் வாய்ப்புகள் குறைவு. ஆயினும் சிறு கட்சிகள் துணை கொண்டு தேசியக்கட்சி ஆட்சி அமைக்கும் வாய்ப்புகள் அதிகம் என கருத்துக் கணிப்புகள் சொல்கின்றன.

இந்தத் தேர்தலில் தேசியக் கட்சி தேசிய வேட்பாளர் பட்டியலில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பொறியியல் ஆலோசகர் செந்தூரன் அருளானந்தம் இடம்பெற்றுள்ளார்.

அவர் இங்கிலாந்து, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் பெரும் கட்டுமான திட்டங்களில் ஆலோசகராக பணியாற்றி உள்ளார்.

இவர் யாழ்.புனித ஜோன் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)


# இராசிபலன்

13.10.2023
புரட்டாதி 26, வெள்ளிக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 10.28 மணிவரை
உத்தரம் பிற்பகல் 3.40 மணிவரை


சுபநேரம் -6.02-7.32 மணிவரை
இராகுகாலம்-10.32-12.02 மணிவரை
சித்தாமிர்தம்,சந்திரகத மாளயம்.

சந்திராஷ்டமம்- சதயம்,பூரட்டாதி.


வளவன்




சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.




ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், உறவினர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், காரிய அனுகூலமுண்டு.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.




ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் வாய்ப்புண்டு.




வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு.




இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பேச்சில் இனிமை தென்படும், கௌரவமான நாள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும், விருந்தினர் வருகையுண்டு, கௌரவமான நாள்.




குழப்பங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.




குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.




வாழ்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், உறவினர் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

சொந்த நாற்காலியில் மட்டுமே ஒருவர் சுகமாக உட்கார முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

## யாழ்.பல்கலைக்கழக முன்றலில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக நேற்று மதியம் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம் மற்றும் தொழிற்சங்க கூட்டுக் குழு ஆகியவற்றின் தீர்மானத்திற்கமைவாக நேற்று அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கு ஆதரவு தெரிவித்து யாழ்.பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக பணியாளர்களை பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அரசாங்கத்தின் காலம் தாழ்த்தும் செயற்பாடுகளுக்கு ஏதிர்ப்புத் தெரிவித்தும் தீர்வினை வேண்டியுமே குறித்த அடையாள ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.




பல்கலைக்கழக முன்றலில் இடம்பெற்ற இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் "மொழித் தேர்ச்சி கொடுப்பனவை மீள் வழங்கு, பல்கலைக்கழக ஊழியர்களின் இல்லாமல் ஆக்கப்பட்ட சம்பள உயர்வை உடனடியாக வழங்கு, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வெற்றிடங்களை உடனடியாக நிரப்பு, ஊழியர்களின் சேமலாப, நம்பிக்கை ஓய்வூதிய நிதிகளை கொள்ளையடிக்காதே, அரசே அரச பல்கலைக் கழக முறைமையை காப்பாற்று, வாழ்க்கை செலவு அதிகரிப்புக்கு ஏற்றாற்போல் சம்பள அதிகரிப்பை வழங்கு" உள்ளிட்ட வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(நி-5-6-33-104-250)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சுற்றுலாத் துறை சார்ந்த சேவை வழங்குநர்களின் திறன் விருத்திக்கான இலவச பயிற்சிநெறி ஒன்றினை நடத்த வட மாகாண சுற்றுலாப் பணியகம் திட்டமிட்டுள்ளது.

அது தொடர்பில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இப்பயிற்சி நெறியில், முச்சக்கரவண்டி, வாடகைக் கார், சிறிய வான், பெரிய வான் உரிமையாளர்கள், சாரதிகள், நினைவுச் சின்னாங்கள் தயாரிப்பாளர்கள், கைவினைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள், தங்குமிட உரிமையாளர்கள், உணவக உரிமையாளர்கள், சுற்றுலா வழிகாட்டிகள் போன்ற சுற்றுலாத் துறையுடன் தொடர்புபட்ட சேவை வழங்குநர்களுடன், பங்குபற்றி பயன் பெற்றுக் கொள்ள முடியும்.

சிறந்த தொழில் முயற்சியாளர்களின் வெற்றிப் பயணங்களின் அனுபவப் பகிர்வினையும் வட மாகாண சுற்றுலாப் பணியகத்தினால் வழங்கப்படவுள்ள அடையாள அட்டையினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே குறித்த பிரதேசத்தை சார்ந்த ஆர்வம் உள்ளவர்கள் தமது விபரங்களை எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் பதிவு செய்யு மாறும் மேலதிக தகவல்களை 0212217311 அல்லது 077 844 9742 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ tourismmorth.srilanka@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாகவோ பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-33)

## மாவட்ட விவசாய குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலக விவசாயக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது என யாழ்.அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.

இதில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, கடற்றொழில் அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ் மற்றும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

# இலங்கையின் கல்வி முறைமைகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதே இலக்கு

## யாழில் சுசில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"எதிர்காலத்தில் இலங்கையின் கல்வி முறைமைகள் சர்வதேச மட்டத்துக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்" என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கலாசாலையின் நூற்றாண்டு விழாவில் நேற்று முன்தினம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் கல்வி முறைமைகளை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

மேலும் முன்பள்ளிக் கல்வி, பாடசாலைக் கல்வி, தொழிற் பயிற்சிக் கல்வி மற்றும் உயர் கல்வி ஆகிய நான்கு துறைகளும் ஏனைய முன்னேறிய கல்வி முறைகளுக்கு அமைவாக பாடநெறிகள் மற்றும் வளங்களுக்கு இணையாக அபிவிருத்தி செய்யப்படும்.

எதிர்காலத்தில் ஒன்றிணைக்கப்பட்ட ஆசிரியர் கல்விக்காக பல்கலைக்கழகம் ஒன்று ஸ்தாபிக்கப்படும்.

இதன்மூலம் யாழ்.குடாநாட்டின் கேந்திர நிலையமாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமையும். வடக்கில்



உள்ள ஆசிரியர் பயிலுநர்களுக்கு இது சிறந்த வாய்ப்பாக அமையும்.

அத்துடன் 2027 ஆம் ஆண்டுக்குள் அனைத்து ஆசிரியர்களையும் பட்டதாரி ஆசிரியர்களாகப் பயிற்சியுடன் பாடசாலை வகுப்பறைகளுக்கு அனுப்புவதே எமது எதிர்பார்ப்பு எனத் தெரிவித்தார். (நி-5-6-33)

## சுகி.சிவத்தின் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாட்டை சேர்ந்த சுகி.சிவத்தின் சொற்பொழிவு நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நெல்லியடி, நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் யாழ். மனவளக் கலைமன்ற அறக்கட்டளைத் தலைவர் பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அதேவேளை நாளை மறுதினம் 4 மணிக்கு யாழ். அறிவுத்திருக்கோவிலிலும் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.(நி-5-6)

# பிரம்படி படுகொலையின் நினைவேந்தல் அனுஷ்டிப்பு



(அராலி)

கொக்குவில் பிரம்படி படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பன்னிரெண்டாம் திகதி அன்று கொக்குவில் பிரம்படி பகுதியில் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்களை கொடூரமாக இந்திய இராணுவம் கொலை செய்தது.

அந்தவகையில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் முகமாக 36 ஆவது நினைவு தினம் நல்லூர் பிரதேச சபையின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் இறந்தவர்களின் உறவுகளால் வீதியோரமாக அமைந்துள்ள நினைவுத்தூபியில் சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (நி-5-6-33-104)

## நகையை பொறுப்பேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனை வளாகத்தினுள் பொன் நிறமான நகையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளரை தொடர்பு கொண்டு தகுந்த ஆதாரத்தை சமர்ப்பித்து நகையை அடையாளம் காட்டி பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.எஸ். யமுனானந்தா அறிவித்துள்ளார். (நி-5-6)

## சனீஸ்வர ஹோமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண.வடகிழக்கு கலட்டி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் சனீஸ்வர ஹோமத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை பகல் 11 மணிக்கு சனீஸ்வர பகவானுக்கு அபிஷேகம், ஹோமம், மூலமூர்த்தி பூஜை நடைபெறும் என பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி-5-6)

# இலவச மண்ணெண்ணெய் வழங்கி வைப்பு




(சாவகச்சேரி)

சீன அரசாங்கத்தின் நன்கொடை மூலம் கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் தென்மராட்சி கடற்றொழில் சங்கங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு இலவசமாக மண்ணெண்ணை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு மீனவர்களுக்கான மண்ணெண்ணையை வழங்கி வைத்திருந்தார்.

மேலும் நிகழ்வில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கடற்றொழிலாளர்களுக்கு தலா 78 லீற்றர் என்ற அடிப்படையில் உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை தேர்தலுக்கு முன் நீக்க திட்டம்

## பெரும் குழப்பத்தில் அரசியல் கட்சிகள்



(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என வெளியாகியுள்ள தகவல்களால் அரசியல் வட்டாரங்களில் பெரும் குழப்ப நிலையேற்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும் நீதியமைச்சருக்கும் இடையில் ஏற்கனவே இதுதொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதாகவும் தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கான அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

அமைச்சரவை பத்திரம் இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதி எனவும் இறுதியாக நிறைவேற்று அதிகார முறையை நீக்குவதா? நிறைவேற்று அதிகார பிரதமர் ஊடாக பாராளுமன்றத்தை வலுப்படுத்துவதா? என்பது குறித்து சர்வஜன வாக்கெடுப்பு இடம்பெறும்.

இந்த நடவடிக்கைகள் குறித்து அறிந்ததும் பிரதான எதிர்க்கட்சிகள் ஏற்கனவே தங்கள் மத்தியில் கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளன.

இதனை பாராளுமன்றத்தில் எதிர்க்கப்போவதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

2025 பொதுத்தேர்தல் வரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீடிக்கவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கருதுகின்றது.

தற்போதைய அரசாங்கம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை தொடர்வதற்கான ஆணையை பெற்றது என பொதுஜன பெரமுன கருதுகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதென்றால் 2025 பொதுத்தேர்தலிற்கு பின்னரே அதனை நீக்க வேண்டும். புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கவேண்டும் என பொதுஜனபெரமுன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்க வேண்டும் என எப்போதும் குரல் கொடுத்துவந்துள்ள ஜேவிபி தற்போதைய முயற்சிகளை பாராளுமன்றத்தில் எதிர்க்கும் என தெரியவருகின்றது.

2025 பொதுத்தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த பின்னர் இந்த விடயம் குறித்து ஆராயவேண்டும் என ஜேவிபி கருதுகின்றது.

அடுத்த அரசாங்கம் மக்களின் ஆணையுடன் பதவிக்கு வரும். ஆகவே அதுவரை நாங்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது குறித்து சிந்திக்க முடியாது.

2025 தேர்தலிற்கு முந்தைய முயற்சிகள் வெற்றி பெறாது என ஜேவிபியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 120 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| தக்காளி | 200 | 300 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 150 | 150 |
| கோவா | 180 | 150 | 150 | 200 |
| கரட் | 260 | 320 | 300 | 300 |
| பூசணி | 80 | 80 | 60 | 100 |
| புடோல் | 100 | 120 | 150 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 160 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 220 | 300 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 450 |
| வெண்டக்காய் | 120 | 160 | 100 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 250 | 300 | 240 | 200 |
| லீக்ஸ் | 160 | 180 | 140 | 150 |
| பீற்றூட் | 140 | 120 | 140 | 160 |
| கறிமிளகாய் | 350 | 220 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 150 | 200 |
| கீரை – 1 பிடி | 80 | 70 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 400 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 280 | 300 | 400 | 450 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 150 |

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

### வலிகாமம் வடக்கு பிரதேசசபை, உப அலுவலகம்-தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர் - ராஜதுரை விக்டர் ஆனந்தகுலசிங்கம்**
**முகவரி - இல19, பந்தியடி லேன், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம்-01 கே.கே.எஸ் பொன்னாலை வீதியில் அமைந்துள்ளது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் செ.சோபிதன் முகதாவில் 1473ஆம் இலக்கத்தில் 29.06.2023ஆம் திகதியில் முடிந்த நன்கொடை உறுதிப்படி இராசதுரை சத்துருகுலசிங்கம் என்பவரால் **ராஜதுரை விக்டர் ஆனந்தகுலசிங்கத்துக்கு** நன்கொடையளித்துள்ளார். குறித்த உறுதியின் தாய் உறுதி 2023ஆம் ஆண்டு ஆனி மாதம் 29ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் செ.சோபிதன் முகதாவில் 1472ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் சுப்பிரமணியம் கருணாகரனும் பெண் உசா கருணாகரன் என்பவர்களால் அறுதியளிக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று "தெல்லிப்பளை மேற்கு இறையுமான மாப்பாணன் புதுக்காடும் புதுக்காடும்" நிலப்பரப்பு 6 பரப்பு குளி 2.4 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் வி.தவராஜா அவர்கள் வரைந்த 4612-28.06.2023ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு-A ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு - ஆசீர்வாதம் மாசிலாமணி ஆதனம்.
வடக்கு - கடற்கரை.
மேற்கு -திருமதி மரியசீலன் இன்பராணியின் ஆதனம்.
தெற்கு - யாழ்ப்பாணம் பொன்னாலை பருத்தித்துறை வீதி.

மேற்குறித்த ஆதனத்தை பாலசுந்தரம் ஞானவேல் எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

(7429)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:
076 097 3127
021 221 7603

Viber/ Whatsapp: 076 636 3378

E.mail:
Valampurii@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# இஸ்ரேலில் உள்ள இந்தியர்களை மீட்கும் நடவடிக்கை ஆரம்பம்



(டில்லி)

"ஓப்ரேஷன் அஜய்" என்ற திட்டத்தின் மூலம் இஸ்ரேலில் உள்ள இந்திய மக்களை இந்தியாவிற்கு அழைத்து வரும் திட்டத்தை மத்திய அரசு அறிவிதித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் எக்ஸ் தளத்தில் டுவிட் செய்துள்ளார்.

"இஸ்ரேலில் இருந்து நாடு திரும்ப விரும்பும் நம் மக்களை அழைத்து வருவதற்கு வசதியாக ஓப்ரேஷன் அஜய் தொடங்கப்படுகிறது. சிறப்பு விமானங்கள் மற்றும் பிற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

வெளி நாட்டில் உள்ள இந்திய மக்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு சார்ந்து நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம்"என அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# இந்தியாவின் அழுத்தங்களுக்கு அடிபணியாத கனடா

(டில்லி)

இந்தியாவினால் பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களுக்கு கனடா அடிபணியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் கடமையில் ஈடுபட்டுள்ள ராஜதந்திரிகளை மீள அழைத்துக் கொள்ளுமாறு கனடாவிற்கு இந்தியா அழுத்தம் கொடுத்திருந்தது.



தூதரகத்தில் பணியாற்றி வரும் ராஜதந்திரிகளை இவ்வாறு நாட்டுக்குமீள அழைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக் கப்பட்டிருந்தது. இதற்கான காலக் கெடுவாக பத்தாம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் கனேடிய அரசாங்கம் ராஜதந்திரிகளை மீள அழைத்துக் கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் சீக்கிய மதத் தலைவர் ஒருவர் அண்மையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் முரண்பாட்டு நிலை தீவிரமடைந்துள்ளது.

சீக்கிய மதத் தலைவரை படுகொலை செய்ததன் பின்னணியில் இந்திய முகவர்கள் இருப்பதாக கனடா குற்றம் சுமத்தி இருந்தது இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் 41 ராஜதந்திரிகளை மீள அழைத்துக் கொள்ளுமாறு இந்தியா கோரியதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. (நி-5-6)

# இஸ்ரேல்-ஹமாஸ் தாக்குதலில் 22 அமெரிக்கர்கள் பலி

## தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தகவல்

(வோஷிங்டன்)

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் திடீரென தாக்குதல் நடத்தினர். அத்துடன் பலர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர். இதற்கு பதிலடியாக இஸ்ரேல் காசா மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் இருபக்கமும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.



தொடரும் தாக்குதலில் இருதரப்பிலும் பலி எண்ணிக்கை 3600 ஐ தாண்டியுள்ள இந்நிலையில், ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் இதுவரை 22 அமெரிக்கர்கள் உயிரிழந்துள்ளனர் என அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் இதுவரை 22 அமெரிக்கர்கள் உயிரிழந்துள்ளனர் மற்றும் 17 பேர் மாயமாகினர்.

வரும் நாட்களில் இந்த எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்பதை நாம் அறிவோம்.

அமெரிக்கர்களில் பலரை ஹமாஸ் அமைப்பினர் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

மேலும், அமெரிக்கர்கள் இஸ்ரேல் செல்வதற்கான பயணத்தை மறு மதிப்பீடு செய்யும்படியும், காசா நகருக்குச் செல்வதை தவிர்க்கும் படியும் அந்நாட்டு பாதுகாப்புத்துறை அறிவுறுத்தல் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலுக்கு துணை நிற்போம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# பாலஸ்தீனத்திற்கா

# லெபனான்

## இஸ்ரே

(காசா)

### இஸ்ரேல் மீது ஹமாஸ் படையி
### பதற்றம் நாளுக்குநாள் தீவிரமை
### பிளவு ஏற்படும் அபாயம் ஏற்பட்டு

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் படையினர் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது. மறுபுறம், லெபனான் மற்றும் சிரியாவில் இருந்து ஹமாஸ் படையினருக்கு ஆதரவாக தாக்குதல்கள் தொடங்கியுள்ளன. இந்த மோதல் மேலும் பரவும் அபாயம் உள்ளதாக அச்சம் எழுந்துள்ளது.

லைபனான் போராளிக் குழுவான ஹெஸ் பொல்லா இஸ்ரேலிய இராணுவத் தளங்கள் மீது எதிர்ப்பு ஏவுகணைகளை வீசியது.

இந்தத் தாக்குதல்களில் பல வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் ஹெஸ் பொல்லா அறிவித்தார். இந்தத் தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்துள்ளது.

இதேவேளை பாலஸ்



தீனத்திற்கு உதவ செச்சினியாவின் தலைவர் ரம்ஜான் கதிரோவ் படைகளை அனுப்ப முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிரோவ் என்பது ரஷ்யாவின் செச்னியாவில் உள்ள ஒரு துணை இராணுவ படையாகும்.

# மூளையின் ஒ
# நிறுத்தி மரு

(சாக்ரமெண்டோ)

கலிபோனியா மருத்துவர்களின் திறமையாலும் மருத்துவ தொழில் நுட்பத்தின் அபார வளர்ச்சியாலும் மூளையின் ஒருபக்க செயலாக்கத்தை மட்டும் நிறுத்தி சாதனை படைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வசித்து வரும் 6 வயதான பிரையன்னா பாட்லி என்ற சிறுமிக்கு திடீரென வலிப்பு நோய் ஏற்பட்டுள்ளது. இதனால் அச்சிறுமியின் உடல்நலம் குறைந்து அவருக்கு பக்கவாதமும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கலிபோர்னியாவில் உள்ள லோமா லிண்டா பல்கலைக்கழக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின் தான் "ராஸ்முஸ் சென்ஸ் என்சஃ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## ...காக களம் இறங்கவுள்ள

# ...ன் மற்றும் சிரியா

## ...ரேலுக்கு பேரிடி

**...டையினரின் தொடர் தாக்குதலால் மேற்கு ஆசியாவில் ...மடைந்து வருகிறது. இதனால் நாடுகளுக்கிடையே ...பட்டுள்ளது.**



ரஷ்யாவின் வாக்னர் படை ஒரு கட்டத்தில் அரசுக்கு எதிராக திரும்பியபோது அதை எதிர்த்து சண்டையிட்டது இந்த துணை இராணுவ படைதான்.

இந்த படையின் தலைவரான ரம்ஜான் கதிரோவ் தான் இப்போது பாலஸ்தீனுக்காக படைகளை அனுப்ப முன் வந்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துரைக்கையில், இந்தப் போரில் நாங்கள் பாலஸ்தீனத்தை ஆதரிக்கிறோம், நாங்கள் இந்த போருக்கு எதிராக இருக்கிறோம், இது மற்ற மோதல்களைப் போலல்லாமல் மேலும்மேலும் அதிகரிக்க அதிக வாய்ப்புக்கள் இருக்கிறது என்று அவர் கூறியுள்ளார்.

ஈரான் இந்த போரில் பாலஸ்தீனத்திற்கு உதவுவதாக இஸ்ரேல் குற்றம்சாட்டி வருகிறது. ஆனால் ஈரான் அதை மறுத்திருக்கிறது.

அதேநேரம், ஏதாவது ஒரு குண்டு ஈரான் பக்கம் திரும்பினால் கூட இஸ்ரேல் பேரழிவை சந்திக்க நேரும் என்றும் ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒருவேளை இந்தப் போரில் அமெரிக்க படை, இஸ்ரேலுடன் சேர்ந்து தாக்குதலில் ஈடுபட்டால் ரஷ்யாவும் சீனாவும் சேர்ந்து ஈரானுக்கு ஆயுத உதவிகளை செய்யும் எனவும் அதன் பின்னர் ஈரான் தான் ஒட்டுமொத்த மத்திய கிழக்கிலும் கோலோச்சும் நிலை ஏற்படும் எனவும் ரஷ்ய ஜனாதிபதி எச்சரித்திருந்தார்.

இப்படி நிலைமை இருக்கையில் ரஷ்யாவின் துணை இராணுவ படைகளில் ஒன்றான செச்சென் பிரிவு பாலஸ்தீனத்திற்கு உதவுவோம் என்று மட்டும் கூறவில்லை. அவசியமேற்பட்டால் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக சண்டை செய்யவும் தயாராக உள்ளோம் என்று பகிரங்கமாக அறிவித்திருப்பது இஸ்ரேலுக்கு பேரிடியாக அமைந்துள்ளது. (நி-5-6)

## ...ஒரு பக்க செயற்பாட்டை ...ருத்துவர்கள் சாதனை



பலைட்டிஸ்" எனும் அரிய வகை மூளை அழற்சி நோய் இருப்பது தெரியவந்துள்ளது.

அத்துடன் சிறுமியின் மூளையின் ஒரு பாகம் சுருங்கியிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

அச்சிறுமிக்கு வலிப்பு நோய்க்கான மருந்துகளும் ஸ்டீராய்டு மருந்துகளும் கொடுக்கப்பட்ட போதிலும் சிறுமியின் நிலையில் மாற்றம் இல்லை.

இந்த அரிய வகையான நோய்க்கு ஒரு பக்க மூளையின் செயலாக்கத்தை நிறுத்துவதுதான் நிரந்தர தீர்வு என மருத்துவர்கள் கண்டறிந்தனர். இதற்கமைய மருத்துவர் ஆரோன் ராபிஸன் தலைமையில் 10 மணி நேரம் இந்த அறுவை சிகிச்சை நடைபெற்றது.

இந்த அறுவைசிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றதுடன் சிறுமியும் நலமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இந்த நோய்க்கு அழற்சி ஏற்பட்ட மூளையின் ஒரு பகுதியையே நீக்குவது தான் தீர்வாக இருந்தது. தற்போது இதற்கான தீர்வு கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இந்த சாதனை மருத்துவ உலகின் முன்னேற்றமாக பார்க்கப்படுகின்றது. (நி-5-6)

## சர்வதேச சட்ட நிபுணரை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல்

### சுமார் 30 பேர் பலி



(காசா)

சர்வதேச சட்ட நிபுணர் ஒருவர் காசாவில் உள்ள அவரது குடும்பத்தினரை சந்திக்கச் சென்றபோது அவரது வீட்டை குறி வைத்து இஸ்ரேலிய விமானப்படை தாக்குதல் நடத்தியதில் அனைவரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 30 பேர் என மதிப்பிடப்பட்டுள்ளதாக ஹமாஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

வான்வழித் தாக்குதல்களால் ஹமாஸ் அரசியல் பணியகத்தின் பல உறுப்பினர்களின் வீடுகளும் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## இஸ்ரேல்-பாலஸ்தீன யுத்தத்தில் உள்நுழையும் நேட்டோ அமைப்பு



(ஜெருசலேம்)

பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் கடுமையான தாக்குதலை மேற்கொண்டு வரும் நிலையில் இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவிக்க இங்கிலாந்து தனது "R08 குயின் எலிசபெத்" எனும் போர் கப்பலை காசாவை நோக்கி அனுப்ப ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதற்கு முன்னர் அமெரிக்காவின் போர்க் கப்பல் தற்போது காசாவுக்கு அருகே நிலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு கடந்த 7 ஆம் திகதி கடுமையான தாக்குதலை ஆரம்பித்த இந் நிலையில் இந்த விடயம் உலக நாடுகளையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. இதனையடுத்து இஸ்ரேல் 6 ஆவது நாளாக காசா மீது தொடர் தாக்குதலை நடத்தி வருகிறது. (நி-5-6)

## பீகாரில் தடம் புரண்ட ரயில் 4 பேர் பரிதாபகரமாக பலி

(டில்லி)

டில்லியின் ஆனந்த் விஹார் டெர்மினலில் இருந்து அசாமின் காமாக்யா நோக்கிச் செல்லும் அதி விரைவு புகையிரதத்தின் 3 பெட்டிகள் பீகாரில் உள்ள ரகுநாத்பூர் புகையிரத நிலையத்தின் அருகே தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 4 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த விபத்தில் பல பயணிகள் காயம் அடைந்துள்ளனர்.

காயம் அடைந்த பயணிகளை மீட்ட பொலிஸார் மற்றும் பொதுமக்கள் அவர்களை அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுகேது பெயர்ச்சிப் பலன்கள்

## 08.10:2023-25.04.2025

## கூடுதல் கவனத்துடன் செயற்படுங்கள்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



### தனுசு இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், ஒக்டோபர் 8 ஆம் திகதி முதல் 4 ஆம் இடமான சுகஸ்தானத்திற்கு பெயர்ச்சி யாகிறார். அதேநேரம் கேது பகவான் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு வருகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகு-கேது இருவரும் இந்த இடங்களில் சஞ் சரித்து, நட்சத்திரப் பாதசாரங்களுக் கேற்ப பலன்களை வழங்கப் போகிறார்கள்.

உங்கள் ராசிக்கு 4 ஆம் இடமான சுக ஸ்தானத்திற்கு ராகு பகவான் வரும் போது, "அர்த்தாஷ்டம ராகு"வாக வருவ தால், ஆரோக்கியத் தொல்லைகளை அடிக்கடி தலைதூக்கும். கல்வி சம்ப ந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். தொழில் வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்ப வர்களுக்குப் புதிய வேலை கிடைக்கும்.

தொழில் ஸ்தானத்தில் கேது சஞ்ச ரிக்கப் போவதால் பங்குதாரர்கள் விலக நேரிடலாம். புதிய பங்குதாரர்களை ஆராய்ந்து சேர்த்துக் கொள்வது நல்லது. தொழிலில் ஒரு சிலர் மாற்றங்களைச் செய்ய விரும்புவீர்கள். பணிபுரியும் இடத்தில் கவனம் தேவை. அதிகாரப் பதவியில் உள்ளவர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

#### குரு மற்றும் சனி வக்கிர காலம்

8.10.2023 முதல் 20.12.2023 வரை மேஷ ராசியிலும், 25.9.2024 முதல் 22.1.2025 வரை ரிஷப இராசி யிலும் குரு வக்கிரம் பெறுகிறார்.இந்த குரு வக்கிர காலத்தில் கூடுதல் கவனத்துடன் செயற்படுங்கள். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். யாருக்கேனும் பணப் பொறுப்பு சொல்வதென்றால் யோசித்துச் சொல்லுங்கள். உத்தியோகத்தில் உங் களுடைய பொறுப்புகளை பிறரிடம் கொடுக்க வேண்டாம். பொருளாதாரம் சீராகும்.

8.10.2023 முதல் 24.10.2023 வரை மகர இராசியிலும், 10.7.2024 முதல் 5.11.2024 வரை கும்ப இராசி யிலும் சனி வக்கிரம் பெறுகிறார். இந்த வக்கிர காலத்தில் சகோதர பாசம் குறை யும். உடன் இருப்பவர்களால் பிரச்சி னைகள் வரும். பிள்ளைகளை உங்கள் மேற் பார்வையில் வைத்துக் கொள்ளு ங்கள். குடும்பத்தில் அமைதி குறையாம லும், பகை உருவாகாமலும் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனம்.

#### சனிப்பெயர்ச்சி காலம்

20.12.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் செல்கிறார். உங்களுக்கு ஏழரைச் சனி முழுமையாக விலகுகிறது. எனவே தடைகள் அகலும். தனவரவு திருப்தி தரும். மங்கல நிகழ்ச்சிகள்




மனையில் நடைபெறுவதற்கான அறி குறி தென்படும். தொழில் வளர்ச்சியில் இருந்த குறுக்கீடு விலகும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். வீடு, இடம் வாங்கும் வாய்ப்பு உண்டு. வழக்குகள் சாதகமாகும். நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும்.

#### குருப்பெயர்ச்சி காலம்

1.5.2024 அன்று ரிஷப ராசிக்கு குரு செல்கிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் மறைவிடத்திற்கு வருவது யோகம்தான். அதே நேரம் இராசிநாதன் 6 ஆம் இடத்திற்கு வரும்பொழுது கடன் சுமையும், கவலையும் அதிகரிக்கும். அடுத்தவர் நலனில் காட்டிய அக்கறைக் குப் போதுமான ஆதாயம் கிடைக்காது. உத்தியோகத்தில் திடீர் மாற்றம் ஏற் படும். சம்பள உயர்வு உண்டு. கவனத் தோடு செயற்பட வேண்டிய நேரம் இது.

#### பெண்களுக்கான பலன்கள்

ராகு-கேது பெயர்ச்சியின் விளை வாக ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியதிருக்கும். கணவன் - மனை விக்குள் பிணக்குகள் ஏற்படாமல் இருக்க புரிந்து நடந்துகொள்ளுங்கள். பிள்ளை களாலும், பிறராலும் பிரச்சினை உரு வாகும்.

யாரையும் நம்பி எதையும் செய்ய முடியாது. மனக்குழப்பம் அதிக ரிக்கும். தொழில் வளர்ச்சியில் குறுக்கீடு கள் உண்டு. உத்தியோகத்தில் பணி இடமாற்றம் திருப்தி தராது.

#### வளர்ச்சி தரும் வழிபாடு

4 ஆம் இடத்து ராகுவால் நன்மை கிடைக்கவும், 10 ஆம் இடத்து கேதுவால் தொழில் வளம் பெருகவும், சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை முறையாகச் செய்துகொள்ளுங்கள்.

## வேற்று மனிதர்களின் ஒத்துழைப்பால் தொழிலில் வெற்றி காண்பீர்!



### மகர இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், அக்டோபர் 8 ஆம் திகதி முதல் 3 ஆம் இடமான வெற்றிகள் ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதே சமயம் கேது பகவான் உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான பிதுர்ரார்ஜித ஸ்தானத்திற்கு வருகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும், கேதுவும் அதே இடத்தில் சஞ்சரித்து அங்குள்ள நட்சத்திரப் பாத சாரங்களுக்கு ஏற்ப பலன்களை வழ ங்குவார்கள்.

இதுவரை அர்த்தாஷ்டம ராகுவாக சஞ்சரித்து வந்த ராகு, மூன்றாவது இடத்திற்கு வரும்போது முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். வீரத்தோடும், விவேகத்தோடும் செய ற்படுவீர்கள். வெற்றி க்குரிய வாய்ப்புகள் வந்துசேரும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். பங் காளிப் பகை மாறும். பொருளாதார நிலை திருப்தியளிக்கும் என்றாலும், செலவுகள் வரிசை கட்டி நிற்கும்.

9 இல் சஞ்சரிக்கும் கேதுவால் பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். தந்தை வழி ஆதரவு கிடை க்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு பற்றிய நல்ல தகவல் வரும். வீடு, வாக னம் வாங்கும் முயற்சி கைகூடும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்பால், தொழி லில் வெற்றி காண்பீர்கள். குலதெய்வ வழிபாடும், இஷ்ட தெய்வ வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வழிவகு க்கும்.

#### குரு மற்றும் சனி வக்கிர காலம்

8.10.2023 முதல் 20.12.2023 வரை மேஷ ராசியிலும், 25.9.2024 முதல் 22.1.2025 வரை ரிஷப இராசி யிலும் குரு வக்கிரம் பெறுகிறார். அவர் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. உடன்பிறப்புகளின் வழியில் பிரச்சி னைகள் உருவாகும். உயர்மட்ட அதி காரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்று க்கொள்ள மறுப்பர். திறமைக்குரிய அங் கீகாரம் கிடைக்காது. தடைகளும், தாம தங்களும் வந்துசேரும்.

8.10.2023 முதல் 24.10.2023 வரை மகர ராசியிலும், 10.7.2024 முதல் 5.11.2024 வரை கும்ப இராசியிலும் சனி வக்கிரம் பெறுகிறார். அவரது வக்கிர காலத்தில் கூடுதலான விழிப்புணர்ச்சி தேவை. ஆரோக்கியத் தொல்லையால், மருத்துவச் செலவுகள் கூடும். உறவினர் பகை உருவாகும். உள்ளத்தில் நினை த்ததை உடனடியாக செய்ய இயலாது.

#### சனிப்பெயர்ச்சி காலம்

20.12.2023 அன்று கும்ப இராசிக்கு




சனி பகவான் செல்கிறார். இக்காலத்தில் ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. இதன் விளைவாக குடும்பத்தில் நல்ல காரி யங்கள் நடைபெற வழிபிறக்கும். கொடு க்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். இல்லத்தில் மங்கல நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ் வீர்கள். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டை விலைக்கு வாங்குவது பற்றி சிந்திப்பீர்கள்.

#### குருப்பெயர்ச்சி காலம்

1.5.2024 அன்று ரிஷப இராசிக்கு குரு செல்கிறார். அப்பொழுது அவர் உங்கள் இராசியையும், 9, 11 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகிறார். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும். பொரு ளாதார நிலை உயரும். புனிதப் பயண ங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சி வெற்றியாகும். ஆற்றல் மிக்கவர்கள் உங்கள் பின்னணியில் இருந்து காரிய ங்களை முடித்துக் கொடுப்பர்.

#### பெண்களுக்கான பலன்கள்

இந்த ராகு-கேது பெயர்ச்சி காலத்தில் உங்களுக்கு வாழ்க்கைத் தேவை பூர்த்தியாகும். வருமானம் போதுமான தாக இருக்கும். கணவன் - மனைவி க்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே இடம் வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி பலன் தரும். பணிபுரியும் பெண்களுக்கு இட மாற்றமும், இலாகா மாற்றமும் வரலாம்.

#### வளர்ச்சி தரும் வழிபாடு

மூன்றாம் இடத்து ராகுவால் முன் னேற்றம் கூடவும், ஒன்பதாம் இடத்து கேதுவால் ஒளிமயமான எதிர்காலம் பெறவும், இராகு-கேதுக்களுக்குரிய சர்ப்ப பிரீதியை யோக பலம் பெற்ற நாளில் செய்துகொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டச் செயலக வாயிலை மறித்து மீனவர்கள் போராட்டம்



(மன்னார்)

**மன்னார் பள்ளிமுனை கிராம மீனவர்கள் மாவட்டச் செயலக நுழைவாயிலை மறித்து நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



கடற்றொழிலில் ஈடுபடும் தமக்கு, தொழில் ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் பாஸ் நடைமுறை மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் செயற்பாட்டினை கண்டித்து மன்னார் பள்ளிமுனை கிராம மீனவர்கள் மாவட்டச் செயலக நுழைவாயிலை மறித்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடலில் பிடிபடும் ஒவ்வொரு வகையான கடல் உணவுகளுக்கும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரமா? வாழ்வாதாரத்துக்கு வழியில்லாமல் மீன்பிடியில் ஈடுபடும் போது ஏன் எங்களை கடலுக்குள் செல்லத் தடை விதிக்கின்றீர்கள்? சுதந்திரமாக வடபகுதி கடலில் தொழில் செய்த எங்களுக்கு ஏன் இப்போது தடை உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-5-6-285)

# குடமுருட்டி குளத்தினை புனரமைத்து தாருங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள குடமுருட்டி குளத்தினை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள பாரிய மற்றும் நடுத்தர குளங்களில் ஒன்றாக காணப்படும் குடமுருட்டி குள்த்தின் அணைக்கட்டு மற்றும் வான் பகுதி என்பன மிக மோசமாக சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன.

குளத்தின் அணைக்கட்டு பல இடங்களில் மண்ணரிப்புக்கு உள்ளாகி ஆபத்தாக காணப்படுவதுடன் குளத்தில் நீர் தேங் கும் போது பல இடங்களில் நீர் கசிவுகளும் ஏற்படுவதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

40 வருடங்களுக்கு முன்னர் இயந்திர வசதிகள் இன்றி பொது மக்களின் முழுப்பங்களிப்புக்களுடன் அமைக்கப்பட்ட இக்குள மானது இதுவரைக்கும் எந்தவித பாரிய புனரமைப்பு பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை. குளத்தின் புனரமைப்பின் அவசியத்தை வலியுறுத்தி 30 இற்கும் மேற்பட்ட கடிதங்களை அனுப்பி உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இக்குளத்தின் கீழ் 340 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே உரிய அதிகாரிகள் குறித்த குளத்தின் புனரமைப்பின் அவசியத்தை உணர்ந்து கொண்டு குளத்தை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(நி-5-6-315)

# கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு நஷ்டஈடு

(குருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2023, 2024 பெரும் போகத்தில் வறட்சி, வெள்ளம், காட்டுயானை தாக்கத்திற்கு உள்ளான விவசாயிகளுக்கே நஷ்டஈடு கிடைக்கப் பெற்றுள்ளதாக கிளிநொச்சி கமநல காப்புறுதிச்சபையின் உதவிப் பணிப்பாளர் பி.பூரணச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்திருந்தார். தொடர்ந்து தெரிவிக்கையில் 584 விவசாயிகளுக்கு சுமார் 1 கோடியே 27 லட்சம் ரூபாய் நஷ்டஈடாக கிடைக்கப் பெற்றுள்ளது. நாளை சனிக்கிழமை விவசாய அமைச்சர் கிளிநொச்சி வருகின்ற போது சம்பிரதாயபூர்வமாக விவசாயிகளுக்கு வழங்கும் பணிமுன்னெடுக்கப்படவுள்ளது. (நி-5-6-316)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2936

விருயா




சத்தியா




சலீம்




ருக்ஷாயினி




மதிநிலா-




லதுஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 307



மானிய முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் வீற்றிருந்த மண்டபத்துக்குள் ஆழ்வார்க்கடியான் பிரவேசித்தான். அவரை மூன்று தடவை சுற்றி வந்தான்! சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து எழுந்தான்!

"ஓம் ஹ்ராம் ஹ்ரீம் வஷட்டு" என்று நாலு தடவை உரத்த குரலில் உச்சரித்து விட்டு, "குருதேவரே விடை கொடுங்கள்" என்றான்.

அநிருத்தர் புன்னகையுடனே, "திருமலை! என்ன இந்தப் போடு போடுகிறாய்? எதற்கு என்னிடத்தில் விடை கேட்கிறாய்?" என்றார்.

"தாஸன் அவலம்பித்த ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தையும், 'ஆழ்வார்க்கடி யான்' என்ற பெயரையும், தங்களுக்குக் கைங்கரியம் செய்யும் பாக்கியத்தையும் இந்த மாகடலில் அர்ப்பணம் செய்து விட்டு வீர சைவ காளாமுக சம்பிரதாயத்தைச் சேர்ந்து விடப் போகிறேன். கையில் மண்டை ஓட்டை எடுத்துக் கொண்டு 'ஓம் ஹ்ராம் ஹ்ரீம் வஷட்டு' என்ற மகத்தான மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு ஊர் ஊராகப் போவேன்! தலையில் ஜடா மகுடமும், முகத்தில் நீண்ட தாடியும் வளர்த்துக் கொண்டு, எதிர்ப்படுகிற ஸ்ரீவைஷ்ணவர்களுடைய மண்டைகளையெல்லாம் இந்தத் தடியினால் அடித்துப் பிளப்பேன்."

"அப்பனே! நில்! நில்! என்னுடைய மண்டைக்குக் கூட அந்தக் கதிதானோ?"

"குருவே! தாங்கள் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தை இன்னமும் அவலம்பிக்கிறவர்தானோ?"

"திருமலை! அதைப் பற்றி உனக்கு என்ன சந்தேகம்? என்னை யார் என்று நினைத்தாய்!"

"தாங்கள் யார்? அது விஷயத்திலேதான் எனக்கும் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. இரண்டு நதிகளின் நடுவில் அறிதுயில் புரிந்து சகல புவனங்களையும் காக்கும் ஸ்ரீரங்கநாதருக்குப் பணி செய்வதையே வாழ்க்கை எடுத்த பயனாகக் கொண்டிருந்த அன்பில் அனந்தாழ்வார் சுவாமிகளின் கொள்ளுப்பேரர் தாங்கள் தானே?"

"ஆம் அப்பனே? நான்தான்!"

"ஸ்ரீமந் நாராயண நாமத்தின் மகிமையை நானிலத்துக்கெல்லாம் எடுத்துரைத்த அன்பில் அநிருத்தப் பட்டாச்சாரியின் திருப்பேரரும் தாங்கள்தானே?"

"ஆமாம் நானேதான்! அந்த மகானுடைய திருநாமத்தைத் தான் எனக்கும் சூட்டினார்கள்?"

"ஆழ்வார்களுடைய அமுதொழுகும் மதுர கீதங்களைப் பாடிப் பக்த கோடிகளைப் பரவசப்படுத்தி வந்த நாராயண பட்டாச்சாரியின் சாக்ஷாத் சீமந்த புத்திரரும் தாங்களேயல்லவா?"

"ஆமாம் அப்பர் ஆமாம்!"

"ஸ்ரீ ரங்கநாதர் பள்ளி கொண்ட பொன்னரங்கக் கோயிலில் தினந்தினம் நுந்தா விளக்கு ஏற்றி வைத்தும் யாத்ரீகர்களுக்கு வெள்ளித் தட்டில் அன்னமிட்டும் கைங்கரியம் புரிந்து வந்த மங்கையர் திலகத்தின் புதல்வரும் தாங்களே அல்லவா?"

"சந்தேகம் இல்லை!"

"அப்படியானால், என் கண்கள் என்னை மோசம் செய்கின்றனவா? என் கண் முன்னே நான் பார்ப்பது பொய்யா? என் இரு செவிகளால் நான் கேட்டதும் பொய்யா?"

"எதைச் சொல்கிறாய், அப்பனே? உன் கண்களின் மேலும் காதுகளின் பேரிலும் சந்தேகம் கொள்ளும்படி என்ன நேர்ந்து விட்டது?"

"தாங்கள் இந்த ஊர்ச் சிவன் கோயிலுக்குச் சென்று அபிஷேகம் - அர்ச்சனை எல்லாம் நடத்திவைத்ததாக என் செவிகளால் கேட்டேன்."

"அது உண்மையேதான் உன் செவிகள் உன்னை மோசம் செய்து விடவில்லை."

"தாங்கள் சிவன் கோவிலுக்குப் போய் வந்ததின் அடையாளங்கள் தங்கள் திருமேனியில் இருப்பதாக என் கண்கள் காண்பதும் உண்மைதான் போலும்!"

"அதுவும் உண்மையே!"

"இந்தக் கலியுகத்தில் ஸ்ரீமந் நாராயணனே தெய்வம் என்றும், ஆழ்வார்களின் பாசுரங்களே வேதம் என்றும், ஹரிநாம சங்கீர்த்தனமே மோட்சத்தை அடையும் மார்க்கம் என்றும் எனக்குக் கற்பித்த குருதேவர் தாங்களே அல்லவா?"


"ஆம் அதனால் என்ன?"

"குருதேவராகிய தாங்களே சொல்வது ஒன்றும், செய்வது ஒன்றுமாக இருந்தால், சீடனாகிய நான் என்ன செய்யக் கிடக்கின்றது?"

"திருமலை! நான் சிவன் கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்தது பற்றித்தானே சொல்லுகிறாய்?"

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்



## VERTEBRATES

- what is a vertebrate?
  vertebrates are animals that have a back bone and a Skeletan

The Back bone is also calles the Spine

Mammals, Reptiles, amphibians and fish are all Vertebrates.

Example of
Mammals-whales, People
Reptiles-Snakes, Lizard
Amphibians-Frogs, Toad
Fish-Clownfish, Gold fish

Some land vertebrates are-DOg,Cat,Lion, Fox, Giraffe

Some Sea Vertebrates are-whale ,sea house, Dolpin, clown fish, Gold Fish

## INVERTEVRATES

What are invertebrates?
These are animals that do not have a back bone.

Most invertebrates life in water the first animals and earth were invertebrates

jellyfish have been on this earth for more than 500 million years

Do all invertebrates fly?
insects are the only invertebrates that can fly

some Land invertebrates are - earth worms. Moths, butterflies, Bees, Spiders.

Some sea, invertebrate, are-Snails,Squid,starfish,Octopus, Jelly fish

எ.ஜெரோம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால் சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை.
– அல்பேர்ட் ஐன்ஸ்டீன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவை குறைவிலாது நடக்கட்டும்

காங்கேசன்துறை – நாகபட்டினம் கப்பல் சேவை நாளை 14ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக பரீட்சார்த்தக் கப்பல் பயணம் வெற்றிகரமாக நடந்தாகியுள்ளது.

எனவே எதிர்பார்த்ததுபோல காங்கேசன் துறையில் இருந்து நாகபட்டினத்துக்கும் நாகபட்டினத்திலிருந்து காங்கேசன்துறைக்குமான பயணிகள் கப்பல் சேவை நடைபெறப் போவது உறுதி.

இவ்வாறு இருவழிக் கப்பல் சேவை நடைபெறும்போது அதனால் எம் மக்களே அதீத நன்மையைப் பெறுவர்.

ஆம், பொதுவில் தமிழகத்துக்கும் இந்தியாவின் ஏனைய இடங்களுக்கும் தலயாத்திரை செல்கின்ற மரபு நம் ஈழத் தமிழ் மக்களிடம் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது.

அதிலும் குறிப்பாக முன்பெல்லாம் கப்பல் மூலமாக நம்மவர்கள் சிதம்பரத்துக்குச் சென்று வழிபாடு செய்துவிட்டுத் திரும்புகின்ற நடைமுறை இருந்துள்ளது.

இருந்தும் கடந்த பல வருடங்களாக தமிழகத்துக்கும் தலைமன்னாருக்குமிடையிலான கப்பல் சேவை நின்று போனதன் காரணமாக இந்தியாவுக்குச் சென்று தல தரிசனம் செய்கின்ற வாய்ப்பு பலருக்குக் கிடைக்காமல் போயிற்று.

ஆனால் அந்தக் குறையை நிவர்த்திப்பதாக காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்குமிடையிலான கப்பல் சேவை ஆரம்பமாகவிருக்கிறது.

எனவே அந்தக் கப்பல் சேவை குறைவிலாது நடக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்போமாக.

தவிர, பலாலி விமான நிலையத்திலிருந்து சென்னைக்கு விமானப் பயணம் இடம்பெறும் போது, எதற்காக கப்பல் சேவைக்காக அவாப்படுகிறீர்கள் என யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் ஓர் உண்மையை நாம் கூறியாக வேண்டும்.

அதாவது இந்தியாவுக்கான விமானக் கட்டணம் என்பது மிகவும் உயர்வாக இருப்பதனால் சாதாரண மக்கள் விமானத்தின் மூலமாக இந்தியா செல்வதென்பது நடைமுறைக்குச் சாத்தியமாகாது.

மாறாக கப்பல் மூலமாக பயணிக்கும் போது, அது மிகக் குறைந்த கட்டணமாக இருக்கும் என்பதுடன் கனிசமான பொருட்களை பயணத்தின்போது எடுத்து வருவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு.

அதுதவிர இஃது சாதாரண மக்களும் இந்தியா சென்று அங்குள்ள ஆலயங்களை வழிபடுவதற்கும் அந்த நாட்டைப் பார்ப்பதற்குமான அரியவாய்ப்பாக அமையும் என்ற காரணத்தால் மட்டுமே கப்பல் சேவை தேவை என்ற கோரிக்கை விடப்பட்டது.

இங்கு பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்ட மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயாவின் அயராத முயற்சியும் அதற்கான சந்திப்புகளும் தொடர்பாடல்களும் நெஞ்சாரப் பாராட்டப்பட வேண்டியவை.

அதே சமயம் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள கப்பல் பயணக் கட்டணம் குறைக்கப்பட்டு எடுத்துவருகின்ற பொருட்களின் எடையும் அதிகரிக்கப்படுமாயின் அது நம் மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

# புலி அமைப்பின் வாலை மட்டுமே எம்மால் அழிக்க முடிந்தது

## சரத் வீரசேகர கவலை

(கொழும்பு)

**தோட்டாக்களினால் பெற்றுக்கொள்ள முடியாது போன தமிழீழத்தை, 13 இன் ஊடாக பெற்றுக் கொள்வதே சிலரின் இலக்காகும் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.**

ஜனாதிபதி ஊடகப் பிரிவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், எல்.டி.டி.ஈ. அமைப்பை நாம் பெரும்பாலும் அழித்துள்ளோம். ஆனால், நாம் புலி அமைப்பின் வாலை மட்டும்தான்அழித்துள்ளோம்

அதன் தலை உள்ளிட்ட ஏனைய பகுதிகள் ஐரோப்பிய நாடுகளில் இருந்து இன்னமும் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

தமிழ் பிரிவினை வாத புலம் பெயர் அமைப்புக்கள், தங்களின் கனவை இன்னமும் விட வில்லை.

தோட்டாக்களினால் பெற்றுக் கொள்ள முடியாதுபோன தமிழீழ த்தை, 13 இன் ஊடாக பெற்றுக் கொள்வதே இவர்களின் இலக்காகும்.

இதனால்தான், நாம் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக ஜெனிவாவில் இவர்கள் குற்றஞ்சாட்டி வருகிறார்கள். அத்தோடு, வடக்கு கிழக்கிலுள்ள பௌத்த புராதன சின்னங்களை அழிக்கும் செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

யுத்தத்திற்கு பின்னர் 12 ஆயிரத்து 422 புலி உறுப்பினர்களை நாம் புனர்வாழ்வளித்து, சமூகமயமாக்கியுள்ளோம்.

பயங்கரவாதத்தை நாம் கட்டமைப்பு ரீதியாக இல்லாதொழித்தாலும், அவர்களின் ஈழக் கனவு இன்னமும் இருப்பதனால், எமக்கு இன்னமும் அச்சுறுத்தலான சூழல் இன்னமும் தொடர்ந்துக் கொண்டுதான் இருக்கிறது. இந்த நிலையில் தான் மீண்டும், எல்.டி.டி.ஈ. அமைப்பு தலைத்தூக்கிவருவதாக இந்தியாவிலிருந்து எமக்கு புலனாய்வுத் தகவல் ஒன்று கிடைத்துள்ளது.இதுதொடர்பாக இராணுவப் புலனாய்வுத் துறையினர், ஆராய்ந்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கான செயலகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா இன்று சண்டிலிப்பாய், வடலியடைப்பு கலாசார மத்திய நிலையத்தில் காலை 9.மணிக்கு வலி. தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலரும், கலாசாரப் பேரவையின் தலைவருமான திருமதி . யசோதா உதயகுமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரம், சிறப்பு விருந்தினராக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி. லாகினி நிருபராஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

## 9 ஈரானியர்களுக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

(கொழும்பு)

ஹெரோயின் கடத்தல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஈரான் நாட்டைச் சேர்ந்த 9 பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் வியாழக்கிழமை நேற்று ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

இலங்கையின் எல்லைக்குள் ஹெரோயின் போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் குறித்த ஈரானியர்கள் ஒன்பது பேருக்கும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா ஆயுள் தண்டனை விதித்தார். குற்றவாளிகள் 9 பேரும் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி அக்குறள பகுதியில் வைத்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். மேலதிக விசாரணைகளுக்காக அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களிடமிருந்து கடற்படையினர் 100 கிலோகிராம் ஹெரோய்ன்போதைப் பொருளை கைப்பற்றினர். (நி-5-6)

## இலங்கை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ஜப்பான்

(கொழும்பு)

விசேட திறன்களைக் கொண்ட இலங்கை இளைஞர்களுக்கு எஸ்.எஸ்.டபிள்யூ பிரிவின் கீழ் ஜப்பானில் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கு புதிய ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டுள்ளது.அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அதன் நிறுவனமும் ஜப்பானும் கையெழுத்திட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

செவிலியர் சேவைகள், உணவு பதப்படுத்தல் மற்றும் விவசாயத் துறைகள் தொடர்பாக, இதன் கீழ், இந்த நாட்டின் இளைஞர்கள் 5 வருட சேவைக் காலத்திற்கு வேலை வாய்ப்புகளைப் பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய மொழிப் புலமைப் பரீட்சை மற்றும் விசேடதிறன் தொடர்பான பரீட்சையின் 4 ஆம் நிலை சித்தியடைந்த இளைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

## காணாமல்போன மாணவன் சடலமாக மீட்பு

(ஹற்றன்)

தெல்தோட்டை பிரதேசத்தில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பாடசாலை மாணவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தெல்தோட்டை லிட்டில் வெலி பகுதியில் வசிக்கும் 10 வயதுடைய பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மதியம் புலமைப் பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்பில் கலந்து கொண்ட பின் மாணவன் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இவ் அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியில் பெய்த கனமழையால், மாணவனின் வீட்டிற்கு செல்லும் வழியில் உள்ள கால்வாயில் உள்ள பாதுகாப்பற்ற பாலத்தை கடக்க முயன்ற மாணவன் வெள்ளத்தில் சிக்கி அடித்து செல்லப்பட்டான்.

கலஹா பொலிஸாரும் பிரதேச வாசிகளும் இணைந்து பாடசாலை மாணவனை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

எவ்வாறாயினும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இடத்திலிருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இடத்தில் நேற்றுக் காலை பாடசாலை மாணவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 09.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** பாலாவி, பொன்னாவெளி ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

10



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

### நாயக்கர் வம்சம் ஸ்ரீவிஜயராஜசிங்கன் (1739-1747)

ஸ்ரீவிஜயராஜ சிங்கன் 1739 தொடக்கம் 1747 ஆம் ஆண்டு வரை இலங்கையின் கண்டி அரசை ஆண்ட மன்னனாவான். தென்னிந்திய மதுரை நாயக்கர் மரபில் பிறந்த இவனே கண்டி நாயக்கர் மரபை உருவாக்கியவன் ஆவான். கண்டி அரச மரபின் கடைசி அரசனான ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் மதுரை நாயக்க மரபைச் சேர்ந்த பெண்கள் இருவரை மணம் புரிந்திருந்தான். இருவருக்கும் பிள்ளைகள் இல்லை.

இவனது இன்னொரு மனைவி மாத்தளைப் பகுதியின் பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளுக்கு ஒரு குழந்தை பிறந்ததாயினும் இளம் வயதிலேயே இறந்து விட்டது. அரசனுக்கு அவனது ஆசைநாயகி ஒருத்தி மூலம் ஒரு மகன் இருந்தான். அவனது பிறப்புக் காரணமாக அவனுக்கு அரசுரிமை கிடையாது. எனவே கண்டியின் மரபுரிமை வழக்கின் படி தனது மூத்த அரசியின் தம்பியைத் தனது வாரிசாக அரசன் தெரிந்தெடுத்தான். இவன் தனது தமக்கையார் மணமுடித்த காலம் முதலே கண்டி அரண்மனையிலேயே வளர்ந்தவன்.

1739 இல் நரேந்திர சிங்கன் காலமானான். அரசியின் தம்பி, ஸ்ரீவிஜயராஜ சிங்கன் என்னும் பெயருடன் சிம்மாசனம் ஏறினான்.

இவன் ஒரு பண்பாடுள்ள அரசனாக விளங்கினான். இந்து சமயத்தைச் சேர்ந்தவனாக இருந்தபோதிலும், கண்டியின் அரச மதமாக விளங்கிய புத்த சமயத்தின் வளர்ச்சியில் பெரும் அக்கறை காட்டினான். ஆளுயரப் புத்தர் சிலைகளை படுத்த, நின்ற மற்றும் இருந்த நிலையில், நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மலைக் குகைகளில் செதுக்குவித்தான்.

இவன் தனக்கு சார்பானவர்களுக்கு முக்கிய பதவிகளை வழங்கினான். பிலிமத்தலாவை அரசனுக்கு சார்பாக இருக்கவில்லை. ஆகையால் அவனது மகா அதிகாரம் பதவியை தனக்கு சார்பாக இருந்த சமரக் கொடிக்கு வழங்கினான். லெவ்கே திசாவைக்கு நாலுகோறளைபதவியையும் வெளிவிட்ட சாம நேருவுக்கு ராஜகுரு பதவியையும் வழங்கினான்.

இவனது காலத்தில் இலங்கையில் கரையோரப் பகுதிகளை ஆண்டு வந்த ஒல்லாந்தருடன், வணிகம் தொடர்பில் பல பிணக்குகள் ஏற்பட்டன. இவன் பல கிறிஸ்தவ தேவாலயங்களை இடித்தான். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளையும் எடுத்தான். ஸ்ரீவிஜயராஜசிங்கன் நாயக்கவம்ச இளவரசியை மணந்து, அவளை தனது பட்டத்து இராணி ஆக்கினான். கி.பி.1747 இல் இவன் இறக்கும் போது இவனுக்கு பிள்ளைகள் இல்லை.

### கீர்த்தி ஸ்ரீஇராஜசிங்கன் (1747-1782)

கீர்த்தி ஸ்ரீஇராஜசிங்கன் என்பவன் கண்டி இராச்சியத்தின் இரண்டாவது நாயக்கவம்ச மன்னன் ஆவான். இவன் மதுரை நாயக்க இளவரசனும், ஸ்ரீவிஜய இராஜசிங்கனின் மனைவியின் சகோதரனும் ஆவான்.

ஸ்ரீவிஜய இராஜசிங்கன் 1747 ஆம் ஆண்டில் இறந்த பின்னர், நாயக்கவம்ச மரபுப்படி அவனது மனைவியின் சகோதரன் கீர்த்திஸ்ரீ இராஜசிங்கன் கண்டியின் மன்னன் ஆனான். அப்போது அவனுக்கு பதினாறு வயது. எனவே அவன் முடிசூடி ஆட்சியை பொறுப்பேற்றது 1751 ஆம் ஆண்டிலாகும். அதுவரையிலும் அவனது தந்தை நரனப்பா நாயக்க ஆட்சியை கவனித்தார். நாயக்கர்களது செயல்களை விரும்பாத பிரதானிகள் அவனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர். இவனது காலம் பிரதானிகளுக்கும் மன்னனுக்கும் இடையில் குழப்பம் நிறைந்ததாக இருந்தது.

நாயக்க அரசர்களுள் கீர்த்திஸ்ரீ இராஜசிங்கனுக்குத் தனியிடம் உள்ளது. அவன் 1760இல் படையெடுத்து ஒல்லாந்தருக்குச் சொந்தமான கட்டுவன கோட்டை, ஹக்மன்த, தங்காலை முதலான தாழ்நிலப் பிரதேசங்கள் சிலவற்றை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டான். இப்படையெடுப்புக்கு தாழ்நிலத்தைச் சேர்ந்த மக்களும் உதவியாக விருந்தனர்.

ஆனால் 1762 இல் ஒல்லாந்தர் மீண்டும் மலைநாட்டைத் தாக்கி தாம் இழந்த பிரதேசங்களை மீட்டுக் கொண்டனர். ஒரு பௌத்த தேசத்தில் நாயக்கர் அரியணையில் வீற்றிருப்பதும் ஆட்சியில் இந்துக்கள் முக்கியம் வகிப்பதும் சிங்களப் பிரதானிகளுக்கும் மதத் தலைவர்களுக்கும் விருப்பான செயலாகப்படவில்லை. அதனால் அவர்கள் கீர்த்திஸ்ரீ இராஜசிங்கனை அரியணையிலிருந்து நீக்கிவிட்டு சீயத்திலிருந்து பிக்குவாக இலங்கைக்கு வரவழைக்கப்பட்ட இளவரசன் ஒருவனை அரசனாக்க முயன்றனர். இன்னொருசாரார் ... தலைமையில் கோபால முதலியார் என்பவரை அரியணையேற்ற விரும்பினர். சதி முறியடிக்கப்பட்டது. புரட்சியாளர்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர். மொலாந்தேயின் காணிகள் கோபால முதலியாருக்கு அரசனால் கையளிக்கப்பட்டன. கண்டியில் ஏராளமான இந்துக் கோயில்கள் இருப்பதும் சிங்கள பிக்குகளுக்கு வெறுப்பைத் தந்தன. சைவ விக்கிரகங்கள் ஊர்வலமாக எடுத்து வருவதும் பிடித்தமாக இருக்கவில்லை. இதுபற்றி கீர்த்திஸ்ரீ இராஜசிங்கனிடம் முறையிட்டபோது பெரஹரா என்ற ஊர்வலத்தைத் தலதாமாளிகையிலிருந்து ஆரம்பித்து வைத்தான்.

1765இல் மீண்டும் மலைநாடு ஒல்லாந்தரால் தாக்கப்பட்டது. பன் எக் என்ற ஒல்லாந்தத் தேசபதியின் தலைமையின் கீழ்படையெடுப்பு நடந்தது. அதற்குத் தாக்குப்பிடிக்க முடியாது போன கீர்த்திஸ்ரீ இராஜசிங்கன் தலைநகரை விட்டு ஓடியதோடு, 1766இல் ஒல்லாந்தருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ள நேர்ந்தது. அதன்படி மலையகத்தின் கரையோரப் பிரதேசங்களான மாத்தறை, காலி, கொழும்பு, யாழ்ப்பாணம் என்பனவும் கல்பிட்டி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகியவையும் ஒரு "ஹவ்வா" அகலமான கரையோரம் முழுமையாக ஒல்லாந்தரிடம் ஒப்படைப்பது கண்டி மன்னின் சுயாதீனத்தை அங்கீகரித்து, ஒல்லாந்தருக்கு வரி செலுத்தாது தமக்குத் தேவையான உப்பை கிழக்கு, மேற்குக் கரையோர உப்பளங்களிலிருந்து கண்டி மன்னன் பெற்றுக் கொள்ளலாம். மலையகத்துக்குச் சொந்தமான ஏழுகோறளை, நான்கு கோறளை, சப்பிரகமுவப் பகுதிகளிலிருந்து கறுவா உரிக்கும் உரிமையை ஒல்லாந்தருக்கு வழங்கல், இரு இராச்சிய எல்லைகளிலிருந்து தப்பி ஓடியவர்களை அவரவர் முன்னைய பிரதேசங்களில் குடியமர்த்தல் என்பன அந்த உடன்படிக்கையின் முக்கிய அம்சங்களாகும். ஒல்லாந்தருக்குப் பெரிதும் சாதகமான இந்த உடன்படிக்கைக்கு மன்னன் ஒப்புக்கொள்ள வேண்டியவனான். இந்த உடன்படிக்கையால் கண்டி இராச்சியம் கடலுக்கான அணுகலை (பாதையை) இழந்தது.

அவர் 1749 இல் நடுக்காட்டு சாமி நாயக்கரின் மகளை மணந்தார். மேலும் மதுரையைச் சேர்ந்த மேலும் மூன்று நாயக்கர் அரசிகளை அவர் மணந்தார். ஆனால் குழந்தை இல்லை. இதைவிட விஜயராகவ நாயக்கரின் பேரனான விஜயமன்ன நாயக்கரின் இரண்டு மகள்களையும் அவர் மணந்தார். 1782 இல் கீர்த்திஸ்ரீ இராஜசிங்கன் குதிரையில் இருந்து விழுந்து இறந்ததும் அவனுடைய சகோதரனான இராஜாதிராஜசிங்கன் அரசனானன்.

### ஸ்ரீஇராஜாதிஇராஜசிங்கன் (1782-1798)

ஸ்ரீஇராஜாதி இராஜசிங்கன் என்பவன் கண்டி நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த மன்னன் ஆவான். இவன் 1782 ஆம் ஆண்டில் இவனது உடன்பிறப்பான கீர்த்தி சிறீ இராஜசிங்கனின் இறப்புக்குப் பின்னர் கண்டி இராச்சியத்தின் மன்னன் ஆனான். பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றியது இவனது காலத்திலேயாகும். 1798 ஆம் ஆண்டு ராஜாதிராஜசிங்கன் மரணமானான். இவனது கால இறுதியில் பிரதானிகளின் அதிகாரம் மன்னனை விட மேலோங்கி இருந்தது.

அவருக்கு ஐந்து நாயக்கர் மனைவிகள். அவருடைய ராணி மனைவி அலமேலு அம்மாள் தேவி. தென்னிந்தியாவின் ராமேஸ்வரத்திலிருந்து வந்த உபேந்திரா அம்மாள்தேவி அவரது இரண்டாவது மனைவி ஆவாள். அவரது ராணி மனைவியின் தங்கையான ரங்கம்மாள்தேவி மூன்றாவது மனைவி ஆவாள். அவர் தனது நான்காவது மனைவியாக சுறியம்மாள் தேவியை நியமித்தார். அவர் ராணி மனைவியின் மற்றொரு தங்கையாக இருந்தார்.

அவர் தனது மூத்த சகோதரரின் அரச மனைவிகளில் ஒருவரான மம்பியே தேவியை அரண்மனை அந்தரங்கத் தலைவி (mist ress) வைத்திருந்தார். இரண்டாவது துணைவி உபேந்திரா அம்மாள் தேவியின் தங்கையான பெண் சுப்ரம்மாநாயக், தனது கணவரின் மரணத்திற்குப் பிறகு ராஜாதி ராஜசிங்கனின் அரண்மனை அந்தரங்கத் தலைவியானார். பின்னர் அவர் கண்டியின் கடைசி மன்னராக இருந்த ஸ்ரீவிக் கிரம இராஜசிங்கனின் தாயானார்.

ஸ்ரீராஜாதி இராஜசிங்கன் கண்டிய இராச்சியத்தை ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களாக ஆட்சி செய்தார். அவரது ஆட்சியின் போது அவர் டச்சு இராணுவத்துடன் பெரும்பாலும் அமைதியான உறவைப் பேணிவந்தார்.

அவரது சகோதரரைப் போலவே, அவர் பௌத்தத்தின் புரவலராக இருந்தார். மற்றும் பல கோவில்களை மீட்டெடுத்தார், அதேபோல் அவரது சகோதரரைப் போலவே புதிய கோவில்களுக்கு நிலங்களை வழங்கினார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

பட்ட குறித்த சடலம் நீல நிற மேல் சட்டை ம்ண்ணிற சேலை அணிந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

சடலமாக காணப்பட்ட குறித்த நபர் நேற்று முற்பகல் 11-12 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் அப்பகுதியில் இருந்துள்ளமை நடத்தப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கிடைத்த தகவலை அடுத்து நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7,33,60,104)


மெகா பவர்
திகதி 2023.10.12
சீட்டிழுப்பு இலக்கம் 1613
L 13 02 03 15 79
67051 911
ரூ.500,000/- இற்கான வெற்றி இலக்கங்கள்
0634337 1364498 1662849 0313483 1548238
மோட்டார் சைக்கிள் வெற்றி இலக்கங்கள் 0199869 0065228
தங்கக் காசு வெற்றி இலக்கங்கள் 1210225 0533349 0875077

மஹஜன சம்பத
திகதி 2023/10/12
சீட்டிழுப்பு இலக்கம் 5265
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
M 2 0 4 5 4 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3507
சீட்டிழுப்பு திகதி 12.10.2023
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 17 31 42 71
B 57850
தேசிய லொத்தர் சபை

லக்கி 7
திகதி 12.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0091
L7 இலக்கம் 1 3
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 2 1 4 0 6 2

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.12
சீட்டிழுப்பு இலக்கம் 574
வெற்றி இலக்கங்கள் தனுசு 22 23 28 60 தனுசு
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.10.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1295
K 01 18 50 57 K
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance 18825


## வவுனியாவில்...

தமிழீழ விடுதலைப் புலிகளால் யுத்த காலத்தில், வவுனியா புதிய கோவில்குளத்தில் ஆயுதங்கள் மற்றும் தங்கம் மறைத்து வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் பல இடங்களில் நேற்று வவுனியா நீதவான் வசீம் அஹமட் மேற்பார்வையில் பொலிஸார் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

தனியார் காணியில் ஆயுதங்கள் மற்றும் தங்கம் புதைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மூன்று இடங்களில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

இறுதி யுத்தத்தின்போது குறித்த காணி அமைந்துள்ள இடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முகாம் இருந்ததாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் வவுனியா நீதவான் நீதிமன்ற உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு பொலிஸ் குற்றத்தடுப்பு விசாரணை ஆய்வக அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பூவரசங்குளம் பொலிஸார் இணைந்து அகழ்வு பணிகளை மேற்கொண்டனர்.

இரண்டு பெக்ஹோ இயந்திரங்களின் உதவியுடன் நிலத்தில் பல மணிநேரம் அகழ்வு மேற்கொள்ளப்பட்டபோதும் ஆயுதங்களையோ வேறு எதனையுமோ கண்டுபிடிக்க முடியவில்லை.

தோண்டப்பட்ட இடங்களில் எதுவும் கிடைக்காததால், மீண்டும் தோண்டப்பட்ட இடங்களை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு தொடர்பான விரிவான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பூவரசங்குளம் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். (ம-7,250)

## ஆறு நாள்...

கேனுசா (வயது - 24) என்கிற ஒரு பிள்ளையின் தாயான இளம் குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கு கடந்த ஆறாம் திகதி காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இருந்தும் காய்ச்சல் குறையாத நிலையில் கடந்த 9 ஆம் திகதி வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் பிற்பகல் உயிரிழந்தார்.

குறித்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7)

## வடக்கை...

யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள பிரிட்டன் அமைச்சர் நேற்று வடமாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த கலந்துரையாடலில் வடமாகாண மக்களின் வாழ்க்கை முறையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் சிறந்த எதிர்காலம் தெரிவதாகவும் பிரித்தானிய அமைச்சர் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியனுக்கு ஆளுநர் விளக்கமளித்தார்.

வடமாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் வாழ்வை கட்டியெழுப்புவதற்கும் பூரண ஆதரவை வழங்குவதாக பிரித்தானிய அமைச்சர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்ரிக்கும் கலந்து கொண்டார். (ம-7,33,104)

## நவராத்திரி...

திருமுருகன் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் என்பது தனித்து பாடப் புத்தகங்களைப் போதிக்கின்ற இடம் மட்டுமல்ல.

மாறாக மாணவர்களிடம் இருக்கக் கூடிய ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை வளப்படுத்துவது. மாணவர்களிடையே கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை வளர்ப்பது.

ஆன்மிக நாட்டத்தை உருவாக்கி அதன் மூலம்அவர்களை ஒழுக்கமான, நேர்மையான, அன்பும் இரக்கமும் உடையவர்களாக ஆக்குவது என்பன உள்ளிட்ட உன்னதப் பணிகளை செய்கின்ற பொறுப்பும் பாடசாலைகளையே சாரும்.

இதற்காகவே பாடசாலைகளில் நவராத்திரி பூசை வழிபாடுகள் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

மாணவர்களிடம் இருக்கக்கூடிய கலைத்துவத்தை வெளிப்படுத்துகின்ற காலமாக நவராத்திரி காலம் அமைகிறது.

மாணவர்கள் ஒன்றுகூடி மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல், கோலம் போடுதல் தாமாகவே பூசை ஏற்பாடுகளைச் செய்தல் என்பதன் மூலமாக எமது பண்பாட்டு விழுமியங்களைக் கற்றுக் கொள்வதற்கான ஒழுங்கமைப்பு நவராத்திரி காலத்தில் நடந்தாகும்.

இவை தவிர, மாணவர்களை வழிப்படுத்தக் கூடிய ஆன்மிக சிந்தனையாளர்களின் உரைகளும் கூடவே மாணவர்களின் சொற்பொழிவு களும் இடம்பெறும்.

இருந்தும் நவராத்திரி காலத்தில் தவணைப் பரீட்சைகளை நடத்தும் போது மாணவர்கள் பரீட்சையில் மட்டுமே ஆர்வம் காட்டுவர்.

இது நவராத்திரியின் மகிமையை குறைத்து மாணவர்களை தனித்து பாடப் புத்தகப் படிப்போடும் பரீட்சையோடும் மட்டுப் படுத்துவதாக அமையும் எனத் தெரிவித்த கலாநிதி ஆறு. திருமுருகன் இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிறஞ்சனுடன் தொடர்பு கொண்டு நிலைமைகளை எடுத்துரைத்தாகவும் தெரிவித்தார். (ம-7)

## தமிழர்கள்...

இச்சந்திப்பிலேயே இவ்வாறு கோரிக்கை விடப்பட்டது.

மேலும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினை சமகால அரசியல் தொடர்பிலும் விவாதிக்கப்பட்டது.

தமிழர் பிரதேசத்தில் பௌத்தத்தின் ஆதிக்கம், 13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன், சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்ரிக் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2239 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.10.12 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 08 28 65 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,192,352.00
DLB

சனிதா
திகதி 2023.10.12 வெற்றி வாரம் 4400 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 24 52 69 72 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,392,336.00
செகண்ட் சான்ஸ் ரூ.100,000/- 78606
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3951 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.12 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 23 35 56 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,950,680/-
293213 291
DLB

சுப்பர
திகதி 12.10.2023 வெற்றி வாரம் 1415
C 05 17 34 39 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 451,171,654.20
செகண்ட் சான்ஸ் 352102 590
DLB
தொலை பேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 636 திகதி 2023-10-12 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 17 23 24 விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,261,120.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 548/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2065
வர்ணம் : இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.10.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,164,160/-
17 23 26 68 H
568565
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க லொத்தர் விசா

2025 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

★5000 இற்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்படுவர்.

★அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna.
077 755 4528
(17439)

ARA MULTY Traders
Online Courier Delivery

சர்வதேச சிக்கன பொதிகள் பரிமாற்று சேவை

No. 119, Nedunkulam Road, Ariyalai, Jaffna.
(17440)
074 038 3290

CANADA VISA

Canada, UK, France, Australia மற்றும் அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

1)Minor Education - (Age Limit - 7 to 17 years)
தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.

2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.

Contact : VISA Consultant,
136, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584
(17439)

காணி விற்பனைக்கு

புத்தூர் மேற்கு நவற்கிரி சந்திக்கு அருகில் அச்சுவேலி வீதியில் 14 பரப்பு தோட்டம் விற்பனைக்குண்டு. இரண்டு பேர் சேர்ந்து இரண்டாக பிரித்து இரண்டு வீடும் கட்டலாம். பரப்பு 12 இலட்சம்
(17428)
077 706 6487

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (17439)

அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2025ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226244
எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி 07-11-2023 (C-7415)
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம்-1 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | கொழும்பு 0777469777 | திருகோணமலை 0768226237 | சாவகச்சேரி 0768226242 |
| யாழ்ப்பாணம்-2 0768226243 | சுன்னாகம் 0764550670 | [illegible] 0764550673 | பருத்தித்துறை 0768226230 | [illegible] 0776697960 | [illegible] 0764550675 |
| [illegible] 0768226238 | புத்தூர் 0764550671 | பண்டத்தரிப்பு 0777718322 | [illegible] 0777726322 | [illegible] 0743900353 | [illegible] 0777720322 |
| [illegible] 0764550674 | V2 Travels | | | ஒன்லைன் [illegible] 0768226236 | |

அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு

*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?

*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி


*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

(C-7415)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

V2 TRAVELS - 0777-068-777


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 - 10 - 1948 | 12 - 10 - 2023 |

## தர்மலிங்கம் சிவசுப்பிரமணியம் (சற்குணம்)

வடலியடைப்பு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் புளியங்கூடல், திருமலை, பிரம்படி கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சிவசுப்பிரமணியம்(சற்குணம்) அவர்கள் 12.10.2023 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - செங்கமலம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லையா - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், இராசரத்தினம்(செல்வராசா), பரமேஸ்வரன், திவ்வியரத்தினம் கந்தசாமி, செல்வராணி கந்தவேள், சுசிலாதேவி மகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பவளரத்தினம், காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் சிவராஜா, ஈஸ்வரராஜா, சறோஜனிதேவி, சிவானந்தராஜா, சற்குணராஜா, பத்மினி, பத்மநாகபூசணி (சுதா), ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பிரம்படி ஒழுங்கை, கொக்குவிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று 13.10.2023 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரம்படி ஒழுங்கை, கொக்குவில்.
077 755 5061, 077 142 6251, 076 304 9508
(17437)
தகவல் : குடும்பத்தினர்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 15.09.2023 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வன்

## அமரர். சுமந்திரன் அபிஷனன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 13.10.2023 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 15.10.2023 ஞாயிறு மதியம் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

துரைஜயா அவனியூ,
பத்தமேனி, அச்சுவேலி.
(17430)
தகவல் குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org